
# கி.பி.2021 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு உள்சாதிவாரியாகவும் வீடு தவறாமலும் பதிவு செய்யப்பட வேண்டும்

## இந்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் வேண்டுகோள்



இந்திய அரசு 1830 முதல் 1865 வரை மண்டல வாரியாகவும் மாகாண வாரியாகவும் மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் செய்தார்கள், ஆனால். தேர்தலில் போட்டியிடுவது, அரசு வேலைக்கு அமர்த்துவது முதலான பணிகளுக்கு அது போதுமானதாக இல்லை.

பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், பிற்படுத்தப் பட்ட வகுப்பினர், மதச்சிறுபான்மையினர் ஆகியோர் அவரவர் எண்ணிக்கை விகிதாசாரப்படி இன்று வரையில் எந்த நூற்றாண்டிலும் இந்திய அரசும் மாநில அரசுகளும் அவர வருக்கு உரிய பங்கை அளிக்கவில்லை. இதுவரையில் இந்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் வைக்கப்பட்ட கோரிக்கைகள் காற்றில் விடப்பட்ட கோரிக்கைகளாகவே இருந்தன.

முதலாவது பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் ஆணையத்தின் ஆய்வு 1953-55 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றது. அப்போது 2999 உள்சாதிகள் எல்லா மதங்களிலும் சேர்த்து இருப்பதாக அந்தப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் கணக்கிட்டது. அந்தக் கணக்கை 1961-இல் நேரு அரசாங்கம் ஏற்க முடியாது என்று தள்ளுபடி செய்தது.

அதேபோல் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் 3746 உள்சாதி கள் எல்லா மதங்களிலும் இருப்பதாகக் கணக்கிட்டது. அந்த கணக்குப்படி மொத்த மக்கள் தொகையில் 52% பிற்படுத்தப்பட்டோர் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், பிற்காலத்தில் வாஜ்பாயி அரசாங்கம் 200 எண்ணிக்கை சாதிகளையும் காங்கிரசு ஆட்சி மேற்கொண்டு 400 சாதிகளையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது. ஆனால் அதன்படி மக்கள் விகிதாசாரம் கணக்கிடப்படவில்லை.

நம்முடைய அனைத்திந்தியப் பேரவை 3746+ 600 ஆக 4346 உள் சாதிகளின் விகிதாசார எண்ணிக்கை 57 விழுக்காடு ஆகும் என இந்திய அரசுக்குத் தெரிவித்தது. அதேபோல் பட்டியல் வகுப்பினர் 1975-இல் 15 விழுக்காடு இருப்பதாகக் கணக்கிட்டபடி இன்னமும் அதே 15 விழுக்காடு அனுசரிக்கப்படு கிறது. அதற்குக் காரணம் வீடுதோறும் மக்கள் கணக்கெடுப்பு என்பது துல்லிய மாகச் செய்யப்படவில்லை என்பதுதான்.

**எனவே, 2021-ஆம் பத்தாமாண்டுக் கணக்கெடுப்பு பிற்படுத்தப் பட்டோர், முற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச் சிறுபான்மையினர் ஆகியோர் வீடு வாரியாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என மார்ச்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும் அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடி யினர், மதச்சிறுபான்மையினர் பேரவையும் இந்திய அரசையும் தமிழக அரசையும் வேண்டிக் கொள்கின்றன.**

**1-3-2020**

**- வே. ஆனைமுத்து**


சுவடி : 44
ஏடு : 9
மார்ச் 2020
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**இரா.பச்சமலை**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
பெரியார்-நாகம்மை அறக்கட்டளை வளாகம்
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
பெரியார்-நாகம்மை நூலகம்
அம்பத்தூர், சென்னை - 600 050.

தொடர்புக்கு :
**94448 04980**
**86681 09047**
**95975 26990**
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்**, சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

## திருச்சி சிந்தனையாளர் கழகத் தலைவர், மின்வாரியத் தலைமைப் பொறியாளர்

# கு.ம.சுப்பிரமணியன் மறைந்தார்!

- திருச்சி நா.கருணாகரன்

கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் குள முற்றம் என்ற சிற்றூரில், கு.மருதாச்சலம்-வேதக்கார் என்னும் பெற்றோருக்கு, கு.ம.முத்துசாமி, கு.ம.முத்தம் மாள், கு.ம.சுப்பிரமணியன், கு.ம.சண்முகம் என்ற நான்கு மக்கள்.

அந்நால்வருள், மூன்றாவதாக 26.01.1933இல் பிறந்தவர் கு.ம.சுப்பிரமணியன் ஆவார். அவர் தமிழ்நாடு மின்வாரியத்தில் 37 ஆண்டுகள் 1956 முதல் பணியாற்றித் தலைமைப் பொறியாளராக 1993இல் ஓய்வு பெற்றார்.

அவர்தம் பணிக்காலத்தில் எல்லாம் ஒடுக்கப்பட்ட மக்களைத் தான் பணியாற்றும் மின்வாரியத்தின் கீழ்நிலைப் பணிகளில் பணி அமர்த்துவதில் மிகவும் அக்கறை கொண்டு செயல்பட்டவர். ஒரே சமயத்தில் பலருக்கு பணிவாய்ப்பை உருவாக்கித் தரவேண்டிய பெரியார் அவர்களின் பரிந்துரையை நேரிடையாகப் பெற்றார். அந்த அளவுக்குப் பெரியாருடைய நம்பிக்கை யைப் பெற்றிருந்தார். மேலும் ஏழை, எளிய வேளாண் மக்களை மின்வாரியத்தில் பணி அமர்த்தினார். மற்றும் வணிக மக்களுக்கு மின்தொடர்பு உண்டாக்கித் தரு வதற்கு ஓயாமல் உழைத்தார். இவர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது மின்துறை இலாபத்தில் இயங்கியது.

இவர் இளமையில் படிக்கும் காலத்திலேயே தந்தை பெரியாரை அறிந்திருந்தார். இவர் படித்த பள்ளியிலேயே இவரது தமையனார் பணிபுரிந்தார். இவர் தந்தை பெரியாரின் கொள்கையாளர். அதனால் ‘‘குடிஅரசு’’, ‘‘விடுதலை’’ படிக்கும் வாய்ப்புப் பெற்றார். அதைப் படிக்கப், படிக்க மேலும் பெரியாரைப் பற்றி அறியும் ஆவல் அதிகமாயிற்று. அதனால் 1946-இல் பெரியாரைப் பற்றி அறியும் வாய்ப்புக் கிடைத்தது.

இவர் சிறுவனாக இருக்கும்போதே அவருக்கு இறை நம்பிக்கை கிடையாது. இறைப்பற்று மிக்க இவரது பெற்றோர் கோவிலுக்குப் போகச் சொல்லியும், அங்கு அவர் சென்ற போது அந்தக் கல் சிலைகளைக் காண் பதில் ஒருவித வெறுப்பு உண்டாகியது. பின்னாளில் அவர் நகரத்துக்குச் சென்று படித்ததால், விடுதலை, குடிஅரசு வாயிலாகப் பெரியாரைப் பற்றி முழுமையாக அறிந்து கொண்டார்.

இவர் படித்து முடித்தவுடன் அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, மணப்பாறை போன்ற பகுதிகளில் மின்சாரத் துறையில் அதிகாரியாகப் பணியாற்றினார். முன்பு கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, ஒருங்கிணைந்த மாவட்டமாகத் திருச்சியில் இருந்தன.



இவர் அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் மின் சாரத் துறை அதிகாரியாக இருந்த போது எங்கள் வடக்கலூர், குன்ன ரெட்டியார் மகன் பொறியாளர்; வரதராசன் என்பவர் இவருடன் பணியாற்றினார். பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள என் சொந்த ஊர் வடக்கலூர் (ஏ) அரசமங்கலம். ஆனைமுத்துவின் தாய் பிறந்த ஊர். வடக்கலூர் (ஏ) அரசமங்கலம், அகரம்.

கு.ம.சுப்பிரமணியன் அவர்கள் அரியலூர் மின்சார வாரியத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த போது, தோழர் பெரியார் பெருந்தொண்டர் ஆ.செ. தங்கவேலு அறிமுகமானார். அவரின் மகள் தைரியம் - ஆசிரியர் கோவிந்தசாமி இவர்கள் கலப்புத் திருமணத்தில், 9-7-1961இல், அவரும் அவர் துணைவியார் பானுமதியும் கலந்து கொண்டு வாழ்த்தினர். அப்போதுதான் இவர் ஆனைமுத்துவை நேரில் சந்தித்துப் பேசும் வாய்ப்புப் பெற்றார்; பழக ஆரம்பித்தார்.

படிக்கும் காலத்தில் இருந்தே பெரியார் கொள்கை யில் மிகுந்த ஈடுபாடு கொண்ட காரணத்தினால் அவர் 1959-இல் சிங்காரப்பேட்டையில் தோழியர் பானுமதி என்ற பெண்ணை தந்தை பெரியார் தலைமையில் சாதி மறுப்பு திருமணம் 9-3-1959இல் செய்து கொண்டார்.

தான் பெற்ற இரண்டு மகன்களுக்கும் மிக எளிய முறையில் சாதி மறுப்புத் திருமணம் செய்து வைத்தவர்.

மகன்கள் : புகழேந்தி - கலைமணி<br>
டாண்டு - பியூலாஹீ

மு.க.சு. படிக்கும் காலத்திலேயே தமிழில் கவிதை எழுதும் ஆற்றல் பெற்றவர். இவரது முதல் கவிதை பாவேந்தர் பாரதிதாசன் நடத்திய ``குயில்'' இதழில் இடம்பெற்றது. இவருக்கு மரபுக்கவிதை எழுதும் ஆற்றல் இருந்தும் ஒரு நாளும் ``கவிஞர்'' என்று போட்டுக் கொள்ளாதவர். தமிழில் உள்ள தொன்மங்கள், காப்பி யங்கள், பெரிதும் மூடக் கருத்துக்களையே கொண் டுள்ளவை என்று பெரியார் கருதியதால் தமிழ்ப் புலவர்களைப் பொதுவாக ``அழுக்கு மூட்டைகள்'' என்றே சாடுவார். ``தமிழைக் காட்டுமிராண்டி மொழி'' என்று சொன்னதும் இந்த அடிப்படையில்தான். அவர் தமிழில் கவிதை எழுதுவது பெரியாருக்குத் தெரிந்த போது, மூடநம்பிக்கைகளை ஒழிக்கும் நோக்கில் கவிதை எழுதுங்கள் என்றார். இவர் ஆனைமுத்து அவர்களிடம் பேசிய போது அவரிடம் ஓர் தனித் தன்மை இருந்ததைக் கண்டு அவர் மேல் மிக ஈடுபாடு கொண்டு நெருங்கிப் பழகினார்.

திருச்சியில் வே.ஆனைமுத்து தந்தை பெரியாரிடம் ஒப்புதல் பெற்று, 7.3.1970-இல் திருச்சியில் சிந்தனை யாளர் கழகம் என்கிற அமைப்பு தொடங்கப்பட்டது. இது அரசியல் சார்பற்றது. அரசு அலுவலர்களையும், ஆசிரியர்களையும், வணிகர்களையும், உழவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டது. இக்கழகத்தின் முதலாவது தலைவராக வைக்கம் போராட்ட வீரர் சே.மு.அ. பாலசுப்ரமணியன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 20.02.1971-இல் மறைந்த பிறகு, 1972-இல் திருச்சி கோட்ட மின்பொறியாளராக பணியாற்றிக் கொண்டி ருந்த போது இவர் சிந்தனையாளர் கழகத் தலை வராக தேர்ந்தெடுக்கப்பட்டார். சிந்தனையாளர் கழகத் தலைவராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின் ஆண்டு தோறும் பெரியாரின் பிறந்த நாள் விழா செப்டம்பர் அல்லது வேறு நாளில் சிந்தனையாளர் கழகத்தின் மூலம் பெரியாரை அழைத்துப் பல மாவட்டங்களில் திருச்சி நகரத்திலும், மாவட்டத்தில் உள்ள பல ஊர் களிலும் பெரியார் பிறந்த நாள் விழாவிலும் பேசவும் வைத்தார்.

தோழர் ஆனைமுத்து பெரியாரின் எழுத்துக்களையும் பேச்சுக்களையும் தொகுத்து புத்தகமாக வெளியிட வேண்டும் என்றார். அந்தத் தொகுப்புப் பணிக்காக ஊன் உறக்கம் பாராமல் பெரியாரின் எழுத்துக்களையும், பேச்சுக்களையும், விடுதலை, குடியரசு இதழ்களில் வந்த அனைத்தையும் சேர்த்து தொகுத்து நூலாக்கு வதற்கு ஒரு இலட்சம் வேண்டும். இருப்பினும் ஆனைமுத்து தொகுப்பு பணியில் முழு மூச்சுடன் இறங்கியுள்ளார். இப்பணி ஒருபுறம் நடந்து கொண்டிருக்கும் போது, பணம் வசூல் வேளையில் ஆனைமுத்து உடன் அவரும், நோபிள் கோவிந்தராசலு, சோமுவும் மும்முரமாக இயக்கி னார்கள். 1971 முதல் முயன்று 1973இல் தொகுப்பு பணி முடிந்தது. ``பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்''



'பெரியார் ஈ.வெ.ரா.சிந்தனைகள்' கையெழுத்துப் படிகளைப் படித்துக் காண்பித்து நோபிள் கு.கோவிந்தராசலு, வே.ஆனைமுத்து, ச.சோமு ஆகியோர் தந்தை பெரியார் அவர்களிடத்தில் 3.9.1973இல் கையொப்பமும், பதிப்புரிமையும் பெற்றனர். பெரியார் அருகில் கோ.சம்பத்

தொகுப்பினை சிந்தனையாளர் கழகம் வெளியிட அப்பொறுப்பை திருச்சி சிந்தனையாளர் கழகத் தலை வரான கு.ம.சுப்பிரமணியம் அவர்களுக்கு வழங்கப் பட்டது. சிந்தனையாளர் கழகத் தலைவர் கு.ம. சுப்ரமணியன், செயலாளரும், தொகுப்பாசிரியருமான வே. ஆனைமுத்து, நோபிள் கோவிந்தராசு ஆகியோர் உடனிருந்து பெரியாரிடம் திருச்சியில் 6.9.1972இல் நூலுக்குரிய கையெழுத்து பிரதியை பெரியார் பார்வை யிட்டு, பெரியார் ஈ.வெ.ரா. கையொப்பமிட்டார்.

பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் வெளியீட்டுக்குப் பணம் தேவைப்பட்டது. அன்பில் தருமலிங்கம், பரிந் துரையில் சிலர் கடன் அளித்து உதவினர். கு.ம. சுப்ரமணியன் அவர்கள் தான் பணியாற்றும் மின்சாரத் துறையில் நேர்மையாகப் பணியாற்றியவர். அதனால் அடாவழியில் பணம் கேட்க அவரால் முடியவில்லை. இருப்பினும் அவருடன் பணியாற்றிய பொறியாளர் களும், பணியாளர்களும் பெருமளவுக்கு உதவினர். எப்படியாயினும் எடுத்தப் பணியை முடிப்பது என்ற நோக்கத்தில், கு.ம.சு., வே.ஆனைமுத்து நோபுள் கோவிந்த ராசுலு மூவரும் ஒருவரிடம் கடன் பத்திரத்தில் கையெழுத்து போட்டு ரூபாய் அறுபது ஆயிரம் 2% வட்டிக்கு கடனாகப் பெற்றார். இந்நிலையில் 24.12.1973-இல் பெரியார் இறந்துவிட்டார். பெரியார் மறைவுக்குப் பின் 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்' நூல் அச்சிடப்பட்டன. மொத்தச் செலவு ரூ.1,70,000 ஆனது. 3000 படிகள் அச்சிட்டார் கள். திருச்சியில் பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் நூல் வெளியீட்டு விழா 1.7.1974-இல் திருச்சி தேவர் மன்றத்தில் நடைபெற்றது. அன்றைய முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களால் வெளியிடப்பட்டது.

இவ்விழாவில், கி. வீரமணியும், திராவிடர் கழகத் தலைவர் ஈ.வெ.ரா. மணியம்மையாரும் கலந்து கெண்டனர். 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்' மறுபதிப்பாக, பெரியார்-நாகம்மை ஆராய்ச்சி அறக்கட்டளையின் மூலமாக 2010-இல் அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் கலைஞர் கருணாநிதியால் மீண்டும் வெளியிடப்பட்டது.

பெரியார் வாழ்ந்த காலத்தில் 17.9.1972-இல் திருச்சியில் சிந்தனையாளர் கழகத்தின் மூலமாக "அனைத்திந்திய நாத்திகர் மாநாடு" நடைபெற்றது. அம்மாநாட்டில் தலைசிறந்த பகுத்தறிவு அறிஞர் டாக்டர் கோவூர், ஆந்திர நாத்திக அறிஞர் கோரா, நெ.து.சுந்தரவடிவேலு போன்றோர் கலந்து கொண்டனர். மாநாடு திருச்சியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த மாநாடு பற்றி உளவுத் துறையினர் அரசு அதிகாரி யான இவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசுக்குப் பரிந்துரைத்தனர். அன்றைய முதலமைச் சராயிருந்த - கலைஞர் கருணாநிதியின் பார்வைக்கு அது வந்தது. அவருக்கு இது புதிய செய்தியாக இருந்தது. "உடனே அய்.ஏ.எஸ். அதிகாரிகளும், அய்கோர்ட் நீதிபதிகளும் கோயிலுக்குப் போய்க் கடவுளை கும்பிடு வதற்கு உரிமையுண்டு என்றால்-நாத்திகரான இவருக் கும் கடவுள் இல்லை என்று பரப்புரை செய்ய உரிமை யுண்டு." ஆகையால் இவர்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை; அப்படி எடுக்கவும் சட்டத்தில் இடமில்லை என்று கோப்பில் எழுதிக் கையெழுத்து இட்டு முடித்துவிட்டார். இவர் மின்சார வாரியப் பணியில் - தொடர்ந்து பணியாற்றினார்.

கு.ம.சு. அவர்கள் 1964-65 ஆண்டுகளில் புதுக் கோட்டை மின்வாரியத்தில் பணியாற்றிக் கொண்டிருந் தார். அப்போது தந்தை பெரியார் அவர்களின் சுற்றுப் பயண ஏற்பாடு புதுக்கோட்டையிலும் இருந்தது. இதை அறிந்த அவர் பெரியாரிடம் அனுமதி பெற்று புதுக்கோட்டை வரும் நாளில் அவர் வீட்டில் மதிய உணவுக்கு ஏற்பாடு செய்து இருந்தார். அய்யா பெரியாருக்கு மான் கறியுடன் மதிய உணவு வழங்கப்பட்டது. அய்யா அவர்கள் நன்கு விரும்பிச் சாப்பிட்டார். அந்தச் சுற்றுப்பயணத் தில் ஆனைமுத்துவும் கலந்துகொண்டு அவரும் அவர்கள் வீட்டில் சாப்பிட்டார் என்று கூறியுள்ளார்.

மணப்பாறை, புதுக்கோட்டை போன்ற இடங்களில் பணிபுரிந்த போது மணப்பாறை பகுதியில் உள்ள செம்பரை என்ற ஊரில் மின்சார தெருவிளக்கை தொடங்கி வைக்க அந்த ஊர் ஊராட்சி மன்றத் தலைவர் பெரியாரை அழைத்து தெரு விளக்கை ஏற்றி வைக்க வேண்டும் என்றார். நானும் ஊராட்சி மன்றத் தலை வரும் பெரியாரிடம் அனுமதி வாங்கினோம். அய்யா அவர்களும் அந்த ஊருக்கு வந்து 7.30 மணிக்கெல் லாம் தெருவிளக்கை தொடங்கி வைத்தார். இது தந்தை பெரியாருக்குப் புதிய அனுபவம்.

அரசு அலுவலகங்களில் சாமிப் படங்களை மாட்டி வைத்து ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை நாட்களில் கடவுள், கடவுளச்சி படங்களுக்கும் அந்த பொம்மைகளுக்கும் பூ, பொட்டு வைத்து பூசை செய்தும் கொண்டாடி வந்தனர். நாம் பார்ப்பனர்களுக்கு அடிமைகள் இல்லை என்றும், அடிமைகள் என்பது காட்டிக் கொள்வதில், பெருமைப் படுகின்ற கொடுமை தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றது. அவர் 1956 முதல் மின்சாரத் துறையில் இளநிலைப் பொறியாளராகப் பணியாற்றிய காலத்திலேயே இதற்கு எதிராக மாற்றம் கொண்டு வந்தார்.

தூத்துக்குடியில் மின்வாரியத் தலைமைப் பொறியாளர் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின், 473 நெடுஞ்செழியன் சாலை, கருணாநிதி நகரில் திருச்சியில் அவர் சொந்த மாகக் குடியிருந்த வீட்டை மேல் மாடியில் பார்த்து, பார்த்து திறம்பட மாடி வீட்டைக் கட்டினார். ஓர் அழகான எடுப்பான அற்புதமான வீடு. என்ன காரணத்தினாலோ அந்த வீட்டை விற்றுவிட்டார். பின்பு எண்.35, ஸ்டேட் பேங்க் காலனி, இராப்பட்டி, எடமலைப்பட்டிப்புதூர் என்ற இல்லத்தில் குடியேறி தன் வாழ்நாளின் இறுதி நாள் வரை வாழ்ந்தார்.

கு.ம.சு. அய்யா அவர்களுக்கு அவ்வப்போது உடல் நலிவு வரும் அதை எல்லாம் சமாளித்தார். தலைவர் கு.ம.சு. 86-ஆவது பிறந்த நாளை சிறப்புடன் துணைவி யருடன் குடும்பத்துடன் எளிமையாக மகிழ்ச்சியுடன் கொண்டாடி விட்டு, இரவு 27.1.2020இல் நம்மை எல்லாம் விட்டு மறைந்துவிட்டார். நான் 2012-இல் இதய அறுவை சிகிச்சை செய்துக் கொண்டு வீட்டிற்கு வந்த என்னை பார்த்து நலம் விசாரித்தார், என் மகள் 'தமிழ்க் குயில்' திருமணம் 2013இல் நடைபெற்ற போது திருமணத்தை நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார். என் உடல் நிலையில் சோர்வு வந்து பார்க்க முடியாத நிலையில் இருந்தும் வாடகைக் கார் மூலம் வீட்டிற்குச் சென்று உறையூர் இரா.கலியபெருமாள், என் மகன் விடுதலைத் தமிழனுடன் நான் இறுதி மரியாதை செலுத்தினேன். தோழர் தமிழேந்தி அடிக்கடி கேட்பார், கு.ம.சு. அவர்களைப் பார்த்தாயா? பார்த்தாயா? என்று. உயிர் மூச்சு சென்ற பிறகுதான் என்னால் பார்க்க முடிந்தது. ஓய்வுக்குப் பின்னர் திருச்சி சிந்தனையாளர் கழகத்தைத் திறம்பட நடத்தினார்.

1. திருச்சி சிந்தனையாளர் கழகம்.
2. சேதுக் கால்வாய் மக்கள் எழுச்சி இயக்கம்.
3. தமிழ், தமிழர் ஒருங்கிணைப்பாளர்.
4. தலைவர், ஊழல் எதிர்ப்பியக்கம், திருச்சிராப்பள்ளி.
5. அமைப்பாளர், தொழில்நுட்ப வல்லுநர் குழுமம்.
6. நெறியாளர், பைந்தமிழ் இயக்கம்

இப்படிப் பல்வேறு பணிகளுக்குப் பொருளுதவியும் இயக்கக் கூட்டங்களுக்கும் சென்று வந்தார்.

இவர் இரண்டு கவிதை நூல்களை வெளியிட்டுள் ளார். 2008-இல் "சங்கராயணம்" என்ற கவிதை நூலையும் (சங்கராச்சாரியாரை பற்றியது), 2009-இல் தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற கவிதை நூலை யும், வெளியிட்டுள்ளார். இந்த இரண்டு நூலுக்கும் மறைந்த அறிஞர் "சங்கமித்ரா" அணிந்துரை வழங்கி யுள்ளார்.

திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் சார்பாக 26.10.2014 பெரியாரின் 136-ஆவது பிறந்த நாள் விழாவும் பொறிஞர் கு.ம.சுப்ரமணியன் அவர்களுக்குப் பாராட்டு விழாவும் திருச்சி, கைத்தறி நெசவாளர் திருமண மண்டபத்தில் தோழர் வே.ஆனைமுத்து தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் பெரியார் பெருந் தொண்டர்கள் தோழர் முத்துசெழியன், டாக்டர் எஸ்.எஸ். முத்து, கவிஞர் தமிழேந்தி, வீ.ந.சோ. நோபிள் பார்த்த சாரதி போன்ற அறிஞர் பெருமக்கள் கலந்துக் கொண்டு வாழ்த்தினார்கள். தமிழ் இன உணர்வாளர்கள், பெரியார் இயக்கத் தொண்டர்கள் அனைவரும் இவரது தமிழ் உணர்வைப் பாராட்டிப் பேசினர்.

திருச்சிராப்பள்ளியில் 3.1.2009 அன்று "சிந்தனை யாளன் பொங்கல் சிறப்பு மலர்" வெளியிடப்பட்டது. அவ்வெளியீட்டு விழாவிற்கு இடத்தின் வாடகையும் ஏற்றுக்கொண்டு விழாவிற்கு உரிய செலவையும் ஏற்றுக்கொண்ட பண்பாளர் அய்யா கு.ம.சு.

9.10.1994-இல் வேலூர் மாவட்டம் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி நடத்திய தந்தை பெரியார் 111-ஆவது பிறந்த நாள் விழா மாநாட்டிலும், வேலூர் மாவட்ட விகிதாச்சார இடஒதுக்கீடு மாநாட்டிலும் கலந்துக் கொண்டு பேசிய பெருமகனார்.

இவர் வாழ்ந்த காலத்தில் பெரியாரைத் தவிர வேறு எவரையும் தலைவராக ஏற்றுக்கொண்டதில்லை. இறுதி வரை பெரியார் கொள்கையோடு வாழ்ந்து மறைந்தவர். இறுதியாக, "நான் உங்களை எல்லாம் சூத்திரனாக விட்டுவிட்டுச் சாகமாட்டேன்" என்று தந்தை பெரியார் கூறினார். நீங்கள் ஆனைமுத்துவோடு சேர்ந்து நீங்க ளெல்லாம் பெரியார் கண்ட கனவு - பாதியில் விட்டுச் சென்றவற்றை செய்து முடியுங்கள் என்றார்.

கு.ம.சுப்ரமணியன் அவர்களின் இழப்பு, மா.பெ.பொ.க. தோழர்களுக்கும் திருச்சி சிந்தனையாளர் கழகத்துக்கும் புரட்சிக் கவிஞர் கலை, இலக்கிய மன்றத் தோழர்களுக் கும்-அனைத்து பெரியார் இயக்க தோழர்களுக்கும் மிகப் பெரிய இழப்பாகும்.

**வாழ்க "கு.ம.சு. என்கிற பொறியாளர் கு.ம. சுப்ரமணியன் (எ) மருதநாடன் புகழ்!"**

## நாத்திகத் தந்தை பெரியார்!

மறைநூலே சுருதியென்றும் அறவொழுக்கே
(சு)மிருதியென்றும் உணர்வீரே. உலகியல்தன்
அறிவுகொண்டு இவ்விரண்டும் ஆய்தல் வேண்டாம்.
அறிந்த நூலின் அறிவாலும் தருக்கத்தாலும்
செறிவாகப் பகுத்தாய்ந்து இவ்விரண்டும்
செம்மையில்லை என்றவமதிப்போன் இங்கே
நெறியில்லா நாத்திகனாய்க் குமுகத்தாலே
நீக்கற்கு உரியவனாய் ஆவான் காண்க.
(மனுநீதி. அத்தியாயம் 2, கூற்று 10, 11)

பெரியாரை எம் குமுகம் ஒதுக்க ஆமோ?
பேரழிவின் ஆரியத்தை உடனொதுக்கச்
சரியாகத் தமிழினத்தைப் புதுக்கி வைத்தார்.
சலியாத அவருழைப்பால் உழைக்கும் சாதி
அரிமாவின் நடைவீச்சை உள்வாங்கிற்று.
ஆளுயர்த்தும் மானத்தை மூச்சாக்கிற்று
நரிமாவின் கூட்டத்து எதிர்ப்பாயிற்று
நல்விளைவுப் பகுத்தறிவைப் பயிராக்கிற்று.

நாத்தழும்பேறப் பெரியார் நாத்திகத்தை
நாடெங்கும் பேசி ஆத்திகத்தின் மண்டை
மாத்தழும்பேறச் சாடிக் கொண்டிருந்தார்.
மறை மிருதியில் மண்டிக்கிடந்த கீழ்மைச்
சாத்தழும்பைச் சுட்டியவாறு வலம் வந்தார்.
சாதிமதச் சம்மட்டி கொண்டடித்த
தீக்கொழுப்பின் ஆத்திகத்தை நாத்திகத்தின்
தீத்தெறலாய்த் தாக்கினாரே எரித்துக் காட்டி

ஆளுக்கோர் நீதி சொல்லும் மனுவின் நூலும்
ஆரியச் செல்லுமரித்த தமிழினத்தைத்
தோளுயர்த்தி மீட்டிட ஈராயிரத்துத்
தொல்லாண்டுக் கனவாகப் பெரியார் தோன்றி
"நாலைந்து நூற்றாண்டாய் மிதிபட்டோனே!"
நடுக்குறுத்தும் பகுத்தறிவுப் படையாம் கூர்மை
வாளெடுத்துச் சுழற்று; சூழ்ந்த ஆர்ய மாயை
வீலிட்டு வீழுமடா மிதிடா" என்றார்.

காளான்போல் சூத்திரரை மிதித்திருந்த
கடுந்திமிரின் ஆரியத்தைக் களிறு போலக்
காலால்தான் அவர் உதைத்திருக்காவிட்டால்
'கால்சாதி' தலைநிமிர்ந்து ஏற்றங்கண்டு
மேலாண்மை ஆட்சி எய்தி இருக்க ஆமோ?
வேளைக்கோர்(பச்) ஓந்தியாகும் 'ரசினி காந்தன்'
ஓலைப் புழுவாய்ப் பெரியார் மீது ஊர்ந்தான்.
ஓங்குதீயாய்த் தமிழினமே சுடமாட்டாயோ?

- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**

# வெறுப்பு, சகிப்பின்மையை விதைத்து வெகுமக்களை பிளவுபடுத்தி வஞ்சிக்கும் பா.ச.க.அரசு

- இரா.பச்சமலை

சகிப்பின்மையையும் வேற்றுமையையும் வெறுப்பையும் விதைத்து வன்கொடுமைச் சட்டங்களையும் அரசு பயங்கரவாதச் செயல்களையும் கட்டவிழ்த்து விட்டு வெகு மக்களைச் சிதைத்துப் பலிவாங்கிக் கொண்டிருக்கும் கயமைக் காவிக் கும்பலின் காட்டாட்சி அரசுதான் இந்திய ஒன்றியப் பாரதிய சனதா அரசு. 2014ஆம் ஆண்டு தொடங்கிய ஆட்சிக்காலம் தொட்டு இரண்டாம் ஆட்சிக்கால ஆட்சியில் இதுவரை நிகழ்த்தப் பட்ட அடுக்கடுக்கான கொடுமைகளைப் பட்டியலிட்டு அடுக்கிட இயலாது. அவற்றுள் சிலவற்றைக் கீழே பார்க்கலாம்.

- மக்கள் மாட்டிறைச்சி உண்ணத் தடைச் சட்டம் (நீதிமன்றத்தின் தலையீட்டால் திரும்பப் பெறப் பட்டது).
- பசுப் பாதுகாப்பு என்ற பெயரில் 100க்கும் அதிக மானவர்களைக் கொலை செய்து வெறியாட்டம்.
- மருத்துவப் படிப்புக்காக நாடு முழுமைக்கான நீட் (NEET) நுழைவுத் தேர்வு
- இசுலாமியச் சமயத்தினரின் முத்தலாக் மணமுறிவு முறைத் தடைச்சட்டம்
- மிகுமதிப்புப் பணத்தாள் மதிப்பிழப்புச் சட்டம்.
- சரக்குச் சேவை வரி விதிப்புச் சட்டம்.
- வருமானவரிக்கான ஆண்டு வருவாய் வரம்பை உயர்த்தல்
- தேசியக் கல்விக் கொள்கை
- அகவை வரம்பின்றி பெண் பாலினித்தவரும் அய்யப்பன் கோவிலில் வழிபடச் செல்ல இருந்த தடை உச்சநீதிமன்றத்தால் நீக்கப்பட்டு தீர்ப்பு அளித்த பின்னும் அதைச் செயல்படுத்திட முடியாத படி வன்முறை கட்டவிழ்த்துள்ளது காவிக்கும்பல்.
- இடஒதுக்கீடு வளையத்துள் வராத பார்ப்பனர்கள், மேல் சாதியினருள் நலிந்த பிரிவினருக்கு தனியே 10 விழுக்காடு / ஒதுக்கீடு அளித்து அரசமைப்புத் திருத்தச் சட்டம்
- சம்மு காசுமீருக்கான சிறப்பு உரிமைகளைப் பறித்திட அரசமைப்புச் சட்டம் பிரிவுகள் 35A, 370 களை நீக்கிடல்
- அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தை இராமன் கோவில் கட்டுவதற்கு உரிமையாக்கி உச்சநீதிமன்றத் தீர்ப்பு
- அரசின் தொடர் வண்டித் துறையை முற்றிலுமாகத் தனியார்மயமாக்கிடும் வகையில் படிப்படியாகத் தனியாரிடம் ஒப்படைப்பு
- குடியுரிமைத் திருத்தச் சட்டம் (Citizenship Amendment Act - CAA)
- தேசியக் குடிமக்கள் பதிவேடு (National Citizen Register - NCR)
- தேசிய மக்கள் பதிவேடு (National Population Register - NPR)
- அரசுப் பொதுத்துறை நிறுவனங்களை இழப்பில் உள்ளன என்ற பெயரில் முழுமையாக விற்பனை செய்து வருவதை வேகப்படுத்துதல்
- இழப்பில் உள்ள அரசுப் பொதுத்துறை நிறுவனங் களின் பெரும் பங்குகளைத் தனியாருக்கு விற் பனை செய்து அரசு தனியார் கூட்டு நிறுவனங் களாக மாற்றல்
- பெரும் இலாபம் ஈட்டி ஒன்றிய அரசுக்கு பெருமளவு ஈவுத்தொகை தந்து வரும் பெல் (BHEL) வாழ்நாள் காப்பீட்டுத்துறை (LIC) போன்ற நிறுவனங்களின் பங்குகளையும் தனியாருக்கு விற்றல்.
- கிடு கிடுவெனச் சரிந்து வரும் பொருளாதாரத்தைத் தடுத்தி நிறுத்திடல் என்ற பெயரில் பெரு நிறுவனங் களுக்கான வரி விதிப்பு அளவைக் குறைத்து சலுகையளித்து அரசுக்கு ரூ.1.45 இலக்கம் கோடி அளவுக்கு வரிவருவாய் இழப்பு ஏற்படுத்துதல்
- நடைமுறையில் நெடுங்காலம் பின்பற்றப்பட்டு வந்த வரைமுறைகளையெல்லாம் தகர்த்தெறிந்து விட்டு இந்தியத் தலைமை வங்கியின் (RBI) காப்புத் தொகையிலிருந்து ரூ.1.76 இலட்சம் கோடி அரசு பெற்றுக் கொண்டு அதைப் பெருநிறுவனங்களுக்கு வழங்கிடல்.

முன்பே சொன்னதுபோல் இவை யாவும் நேர்மறை விளைவுகள் ஏற்படுவதுபோல் வடிவமைக்கப்பட்டு எதிர்மறையாக பெரும்பான்மையாகவுள்ள ஏழை எளிய வெகுமக்களுக்குக் கேடு விளைவிக்கும் இது போன்ற எண்ணிலடங்கா இன்னும் பல்வேறு செயல் களில் விரைந்து செயல்பட்டு வருகின்றது இந்தப் பாரதிய சனதாக் கட்சி அரசு.

இவற்றுள் சிலவற்றை விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம். பிறவற்றை அடுத்தடுத்து வரும் இதழ்களில் விவாதிக்கலாம்.

**மாட்டு இறைச்சிக்குத் தடை & பசுப் பாதுகாப்பு:** விரிந்து பரந்த 135 கோடி மக்களையும் பன்முகப் பண்பாடுகளையும் உணவுப் பழக்கங்களையும் கொண்ட மக்களையும் கிறித்துவம் இசுலாம் சமணர் புத்தம் எனப் பல சமயங்களைப் பின்பற்றும் மக்களைத் தனிமனித அடிப்படை உரிமையான விருப்பம் சார்ந்த உணவு வகைகளையும் முறைகளையும் கேள்விக்குள்ளாக்கி மாட்டிறைச்சியைச் சாப்பிடக்கூடாது என்றும் இதனால் பசுவதை கூடாது அவற்றைக் காப்போம் என்ற பெயரில் இறைச்சி உண்போர் பராமரிப்புக்கு பசுமாடு வாங்கி வருவோர் போன்றோரைக் காவிக்கும்பல் நாடுமுழுதும் குறிப்பாக வடமாநிலங்களில் அவர்களை வதைத்தும் பலநூற்றுக் கணக்கானோரைக் கொலை செய்து, வெறியாட்டம் செய்தனர். பசு மாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகக் காட்டுக் காவிக் கும்பலால் மனிதன் கொலை செய்யப்படும் கொடு இழிசெயலை அறவே ஒழித்திடும் வகையில் பசுக்காவலர்கள் என்ற பெயரில் இயங்கும் குழுக்களைத் தடைசெய்யும்படி ஆணையிடாமல் உச்சநீதிமன்றம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி மட்டுமே சொன்னது. ஆனால் இந்தப் பாரதிய சனதா ஒன்றிய அரசு மாநில அரசுகள் மறைமுகமாக அந்த கொலைகாரக் கும்பலை ஊக்குவிக்கும் வகையில்தான் பெயரளவில் வழக்குகள் தொடரப்பட்டு அவர்களுக்குக் கடும் தண்டனை அளிக்கப்படாமல் அவர்களுக்குத் துணை நின்றது. உண்மையில் பசுவதைத் தடைச் சட்டம் மாட்டுக் கறி உண்ணத் தடைச் சட்டம் நடப்பில் உள்ளது எனில் அதைமீறுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து நீதிமன்றங்களில் வழக்குத் தொகுத்து அவை தரும் தீர்ப்புக்கள் அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்க வேண்டுமெயன்றி சட்டத்தைக் காவிக் கும்பல் கையில் எடுத்துக்கொண்டு வெறியாட்டம் போட அனுமதித்த குற்றவாளி மய்ய, மாநில பா.சா.க அரசுகள்தான். இது பா.ச.க-வின் மதவெறி போக்கைப் படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது.

**நீட் (NEET) நுழைவுத் தேர்வு மேல் வகுப்பு நலித்தவர்களுக்குத் தனியே 10 விழுக்காடு கல்வியில் பணிகளில் இடஒதுக்கீடு:**

2013 ஆம் ஆண்டு இந்தத்தேர்வை நாட்டின் கூட்டாட்சித் தத்துவத்திற்கு முற்றிலும் எதிரானது என்றும் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்றும் உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. ஆனால் அதே உச்ச நீதிமன்றம் 2016-இல் எதன் அடிப்படையில் மேற்சொன்ன தீர்ப்பைத் தலைகீழாக மாற்றி நீட்தேர்வு நடத்தப்பட வேண்டுமென்று ஆணையிட்டுள்ளது என்று விளக்க வில்லை. இதில் ஒன்றிய அரசின் தலையீடுதான் காரணம் என்பது தெளிவாகிறது. நாட்டிலுள்ள 29 மாநிலங்களிலும் வெவ்வேறு வகையான பள்ளிப்பாடக் கல்வி முறைகள் பின்பற்றப்பட்டு வரும் நிலையில் ஒன்றியப் பாடத்திட்டத்தின் (CBSE) அடிப்படையில் மட்டும் வினாத்தாள் தயாரிக்கப்பட்டு நுழைவுத் தேர்வு நடத்துவது என ஒன்றிய அரசும் உச்ச நீதிமன்றமும் முடிவெடுப்பது அரசமைப்புச் சட்டம் 14ஆம் பிரிவு அளித்துள்ள அடிப்படை உரிமைகள் சட்டத்தின்படி சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்றபதற்கு எதிரானது. எனவே இந்த நீட் தேர்வு அரசமைப்புச் சட்டத்திற்கே முரணானது. இதில் இன்னும் கொடுமை என்னவென்றால் மாநில அரசுகளின் பாடத்திட்டங்களை மத்தியப் பாடத்திட்டத்திற்கு இணையாக தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகள் ஏன் தரம் உயர்த்திடவில்லை என்று உச்சிநீதிமன்றம் வினா எழுப்பியதுதான்.

தமிழ்நாட்டில் 2016 வரையிலும் நுழைவுத்தேர்வு நடத்தாமல் பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மட்டும் மருத்துவப் படிப்புக்குச் சேர்க்கை நடத்தப்பட்டு வந்தது. அக்காலக்கட்டத்திற்கு முன்பிலிருந்தும் நாட்டின் மருத்துவப் படிப்பின் தரத்தில் தமிழ்நாடுதான் சிறந்து விளங்கி வருகிறது. எனவே நுழைவுத் தேர்வு என்பதும் ஒரு குறிப்பிட்ட பாடத்திட்டம் பின்பற்றப்பட்டு மருத்துவச் சேர்க்கை இருப்பதினாலேயே மருத்துவப் படிப்பின் தரம் உயர்வாக இருக்கும் என்பதைத் தமிழ்நாடு காலமும் பொய்ப்பித்து வந்துள்ளது. மேலும் 7 கோடி மக்கள் தொகை கொண்ட தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசால் அவர்கள் நிதியால் அமைக்கப்பட மருத்துவக் கல்லூரி களை நிருவகிக்க இயலாத இழிநிலையில் உள்ளதாகச் சொல்வதே நாட்டுக்கே தலைகுனிவு, வெட்கக்கேடு, நாட்டு மக்களுக்கும் தமிழர்களுக்கும் நீதிமன்றங்களுக்கே இது அவமானம். எனவே இந்தஇழிவு நீக்க நீட் ஒழிக்கப்பட வேண்டும்.

**பத்து விழுக்காடு இடஒதுக்கீடு:** இது தொடர்பாக முன்பே சிந்தனையாளன் விரிவாகப் பேசியுள்ளது. இதற்காகக் விதி 46 இன்படி கொண்டுவந்த அரசமைப்புச் சட்டதிருத்தம் அடிப்படையிலேயே பிழையானது. ஏனெனில் இப்பிரிவு நலிந்த மக்களைக் குறிப்பாகப் பட்டியல்குல பழங்குடி மக்களைச் சமூக அநீதியிலிருந்து காப்பாற்றிடும் வகையில் அவர்களைக் கல்வியிலும் பொருளாதாரத்திலும் மேம்படச் செய்ய வேண்டும் என்றுதான் சொல்லியுள்ளது. எந்த மேல் சாதிக்காரனும் இந்து மதத்தின்படி சமூக ஒடுக்கு முறைக்கோ கல்வி மறுப்புக்கோ வரலாற்றிலேயே உள்ளாகியிருக்கமாட்டான் என்பதை உச்சநீதிமன்றம் மண்டல் வழக்கின் தீர்ப்பே தெளிவுபடுத்தியுள்ளது.

ஆனால் முதலில் அரசமைப்புச் சட்ட விதிகள் 15(4), 16(4),களில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை களின்படி 1990-இல் வி.பி.சிங் இட ஒதுக்கீடு ஆணை பிறப்பித்ததை உச்ச நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்தது என்பதை நினைவு கொள்ள வேண்டும். அந்தத் தீர்ப்பில் ஒதுக்கீட்டு அளவு 50 விழுக்காட்டுக்குள் இருந்திடல் வேண்டும் என்ற வரையறையை விதித் துள்ளது. இப்போது இந்தப் 10 விழுக்காடு இடஒதுக்கீடு சேர்த்தால் இடஒதுக்கீடு 60 விழுக்காடு என்றாகிவிடும். இது அந்த நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரான செயலாகும். இன்னும் பல்வேறு பிரிவுகளின்படியும் மொதத்தில் அரசமைப்புச் சட்டத்திற்கே முரணானது எதிரானது. எனவே இது செல்லத்தக்கதல்ல என உச்ச நீதிமன்றம் உறுதி செய்யவேண்டும். ஆனால் அது இந்தச் சமூக நீதிக்கு எதிரான இச்சட்டம் குறித்து அமைதி காப்பது இந்தத் துறைக்கே இழுக்குச் சேர்ப்பதாகும் என்பதுடன் பா.ச.க அரசு மேல்சாதிக்காரர்களை முடிந்தவரை அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக பயன் பெறட்டும் என்ற உள்நோக்கத்திற்கு ஏதுவாகிவிட்டதோ என எண்ணத் தோன்றுகிறது.

பா.ச.க. காவிக்கும்பல் இச்சட்டத்தால் தற்போது இடஒதுக்கீடு உரிமையைப் பெற்று வருபவர்களின் நலனில் எவ்வித பாதிப்பும் கிடையாது எனச் சொல்லி வருகிறது. இதைச் சொல்பவன் முட்டாள் அல்லது இதைச் சரி என்பவன் முட்டாள் என்றுதான் எண்ண முடிகிறது. கூட்டாகத் தமிழ்நாட்டில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டுக்கு மேலாக உள்ள 31 விழுக்காடு பொதுப் போட்டியிடங்களுக்கு ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களும் தற்போது தேர்வு பெற்றுவருவது இந்தப் 10 விழுக்காட்டைக் குறைத்துவிட்டால் பொதுப் போட்டியில் இவர்கள் குறைவான இடங்களைத்தானே பெற முடியும். ஒன்றிய அரசில் 50% ஒதுக்கீடு பெற்றுவரும் ஒடுக்கப்பட்ட மக்கள் பா.ச.க சொல்லும் இந்துக்கள்தான். இவர்கள் இந்த ஒதுக்கீட்டை எதிர்த்து 1990 வட நாடு முழுவதும் வன்முறைப் போராட்டம் மேற்கொண்டனர். ஆனால் இந்தக் காவிக்கும்பல் பா.ச.க 10 விழுக்காடு இட ஒதுக்கீடு மேல்சாதிகாரர்களுக்கு வழங்கியுள்ளது. எனவே இவர்கள் கணிப்பில் இந்து மேல்சாதிக் காரன்தான் இந்து சமயத்தினர் ஏனையோர் இந்து சமய வரையறைக்குள் வரவில்லை என்றுதான் உணர முடியும். எனவே பா.ச.க காவிக்கும்பல் உதட்டளவில் போலியாகத்தான் ஒடுக்கப்பட்ட மக்களை இந்துக்கள் என்கின்றனர் என்பது தெளிவு. இவர்கள் இந்துக்கள் என்ற போர்வையில் மனு சட்டப்படி மேல் சாதியினர் தான் உடைமைக்குரியோர் என்பதையும் ஏனையோர் உடைமையற்றவர்களாக ஊழியம் புரிபவர்களாகத் தான் இருக்க வேண்டும் என மனநிலையுடன்தான் உள்ளனர் என்பது உறுதியாகிறது.

மேலும் இப்போது இந்தச் சனாதன பார்ப்பனிய பா.ச.க. காவிக்கும்பல் 10 விழுக்காடு ஒதுக்கீடு பெறும் மேல்சாதியினருக்குரிய வயது வரம்பை உயர்த்திட முனைகின்றனர். ஆனால் ஒடுக்கப்பட்ட மக்கள் இடஒதுக்கீடு பெறுவதற்கான வருமானதிற்கு அரசுப் பணியிலிருப்பவர்களின் சம்பளத்தை இதுவரை கணக்கில் எடுக்கப்படாமலிருந்ததை இனி கணக்கில் எடுக்க வேண்டுமென்று மய்ய அரசு சொல்கின்றது. ஒடுக்கப்பட்ட வகுப்பினர் வருமானம் ரூ.8 இலக்கத் திற்கும் அதிகமெனில் வளமானவர் என இடஒதுக்கீடு பெறத்தகுதி இழப்பர் என்பது விதி. எனவே இடஒதுக்கீடு பெறும் ஒடுக்கப்பட்டோர் வளம்குறைந்தவர்கள் என்பதுதான் புரிந்து கொள்ள முடியும். ஆனால் அதே நேரத்தில் அந்த ரூ.8 இலக்கம் வரை வருமானம் பெறும் மேல்சாதியினர் நலிந்தவர் என்று வரையறுப்ப தாக உள்ளது. அதாவது ரூ.8 இலக்கம் வரை வரு மானம் பெறும் மேல்சாதியினர் ஒடுக்கப்பட்டவர் என்ற இருபிரிவினரை வெவ்வேறு வகையினராகக் குறிப் பிடுவது மேல்சாதிக்காரன் உயர் வருமானம் பெற்றாலும் நலிந்தவர் என்பது அவர் மேல்சாதிக்காரர் என்பதால் தான். ஆனால் ஒடுக்கப்பட்டவர் ரூ.8 இலக்கம் வரை வருமானம் உடையவராக இருப்பாரெனில் அதாவது ரூ.3 (அ) 4 இலக்கத்திற்கு குறைவாக வருமானம் உடையவரெனில் விதி 46 இன் படி பொதுவாக நலி வுற்றோர் என்று கொள்ள வேண்டும். அதன் அடிப் படையில் மேல்சாதி நலிவுற்றோர்களுடன் அனைத்துப் பிற வகுப்பு மக்களிலும் உள்ளோரை நலிந்தோராகச் சேர்ந்து அனைவருக்கும் அந்த 10 விழுக்காடு இட ஒதுக்கீடு பெறுபவர்கள் தொகுப்பில் இணைந்திருக் கலாம் அல்லவா! அது இயற்கை நியதியாக அமைந் திருக்கும். ஆனால் இந்துக்கள் நலன் நாடும் இந்தப் பார்ப் பனக் காவிக் கூட்டப் பா.ச.க.வினருக்கு மேல்சாதி காரர்கள் மட்டும்தான் இந்துக்கள் ஆவர். இதில் கொடுமை என்னவென்றால் பொதுவுடைமைக் கட்சி யினரும் மேற்சொன்ன கூட்டத்தின் கருத்துடன் ஒத்திசைவு கொண்டு செயல்படுவதுதான் அவலம்.

**முதல் பத்தியில் சொல்லப்பட்ட பணமதிப் பிழப்பு சரக்கு சேவைவரி போன்றவை** ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்பதால் இவை குறித்துப் பொதுவாக விவாதிக்கலாம்.

பணத்தாள் மதிப்பிழப்புத் திட்டத்தால் கள்ளப் பணத்தாள் கருப்புப் பணம், காசுமீரீல் நிகழும் பயங்கரவாதச் செயல்கள் ஒழிக்கப்படுமென ஒன்றிய முதன்மை அமைச்சர் அறிவித்தபோது முழக்கமிட்டார். இதனால் சிலருக்குத் துன்பம் நேரிடலாமென்றும் மக்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்றார். அத்துடன் மேற்சொன்ன நோக்கம் அறுதிங்களுக்குள் நிறைவேறாவிடின் தன்னை முச்சந்திப்பில் நிறுத்தித்

தண்டிக்கலாமென்றார். ஆயிரக்கணக்கான சிறு குறுந் தொழில்கள் அழிந்தொழிந்து பல இலட்சக்கணக் கானோர் வேலையிழந்து அவர்கள் வாழ்வெல்லாம் குலைந்துவிட்டது. நூற்றுக்கும் மேலானவர் பலி ஆக்கப்பட்டனர். புதிய பணத்தாள் அச்சிட பல 10,000 கோடி ரூபாய்க்கும் மேலும் செலவானது. மொத்தத்தில் திட்டமிட்டு உயிர்ப் பலி வாங்கி இலக்கக்கணக்கானோரின் வாழ்வை சிதைத்துவிட்டது இந்த பா.ச.க அரசு.

ஆனால் அதே நேரத்தில் வசதி படைத்தோர் எந்த இன்னலுக்கும் ஆளாகாமல் பெருநிறுவனங்களும் பெருஞ் செல்வந்தர்களும் கள்ளப்பணத்தை மொத்த மாக நல்ல பணமாக்கிக் கொண்டனர். ஆனால் அய்யத் திற்குள்ளாகும் அனைவரின் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொண்டு கணக்கில் வராத பணத்தைப் பறிமுதல் செய்து தண்டவரி பெறப்படும் என அரசு சொன்னது. ஆனால் சில ஆயிரம் பேரிடம் விளக்கம் கேட்கப் பட்டுள்ளது என்பதைத் தவிர இத்திட்டம் நடைமுறைக்கு வந்து நான்காண்டு வரையாகியும் இதுவரை எப்பயனும் கிட்டவில்லை.

**சரக்குச் சேவை வரி விதிப்பு** நடைமுறைப்படுத்தி நான்கைந்து வகையான வரிகளை விதித்து பொருள்களுக்கு நாடு முழுவதுக்கும் பொருள்களுக்கும் சேவைக்கும் ஒரே வகை வரி என்று 30.6.2017 நள்ளிரவு நாடாளுமன்றதைக் கூட்டி 1.7.2017 லிருந்து நடைமுறைக்கு வரும் என்று சட்டம் இயற்றினர். இதனால் மாநிலங்கள் ஒவ்வொன்றின் தன்னாட்சி அதிகாரம் அடித்து நொறுக்கப்பட்டுவிட்டது. இது இந்தியா குடியேற்ற நாடாக ஆங்கிலேயர் காலத்தில் இருந்த போது மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருந்த மாநிலங் களுக்கான வரிவிதிப்பு உரிமையைக் கூட முற்றிலுமாக பறித்துக் கொண்டதுடன் ஒன்றிய அரசின் அடிமை மாநிலங்களாக மாற்றிவிட்டது போன்ற நிலைதான் இப்போது உருவாகியுள்ளது. எனவே இந்திய ஒன்றிய அரசமைப்புச்சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடான கூட்டாட்சித் தத்துவத்தை இந்த வரிவிதிப்புச் சட்டம் முற்றிலுமாக சிதைத்துவிட்டது. இது பெரியார் நாடு விடு தலை பெற்றபோது வெள்ளையனிடம் மாநிலங்கள் பெற்றுவரும் உரிமைகள் கூடப் பறிக்கப்பட்டு விடு தலைக்குப்பின் மாநிலங்கள் அடிமைகளாக நடத்தப் படும் என அறைகூவல் விடுத்து நாட்டின் விடுதலை நாளைத் 'துக்க நாள்' என்றார் பெரியார். அது இப்போது முற்றிலும் உண்மையாகிவிட்டது.

மாநிலங்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மை யையும் பண்பாட்டையும் கொண்டு வெவ்வேறான சமூக பொருளாதாரச் சூழலில் அதற்கேற்ற தன்மையில் பல்வேறு தொழில்களில் தனிமனிதனின் வேலைக் கான அதற்கான சம்பள விகிதங்களும் பொருள்களின் விலைகளும் அதற்கேற்றாற் போல் வரிவிதிப்புகளும் இருந்து வந்தன. காட்டாக நெல்சாகுபடிச் செலவுகூட மாநிலங்களுக்குள் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு கூலிகள் இடுபொருள்களின் விலைகள் என்பதின் அடிப்படையில் வெவ்வேறாக இருக்கும். அதன் அடிப்படையில் அரிசி விலை சென்னையிலும் பிற பகுதிகளிலும் வெவ்வேறாக இருக்கும். மாநிலத்திற் குள்ளேயேயும் இதுதான் நிலை என்றால் ஒன்றியத்தி லுள்ள வெவ்வேறு மாநிலங்களில் பல்வேறு விலைகள் இருக்கலாம். இது பெரும்பாலான பொருள்களுக்கும் சேவைக்கும் பொருந்தும். எனவே நாடு முழுமைக்கும் ஒரு பொருளுக்கு ஒரே விலை என்பது வளராத மாநில மக்களுள் வறியோரை நலிவுறச்செய்யும். எனவே நாடு முழுதும் சற்றேறக் குறைய ஒரே செலவில் உற்பத்தி யாகும் பொருள்களை ஒரு தொகுப்புக்குள் அடைத்து அப்பொருள்களுக்கு நாடு முழுமைக்கும் ஒரே வரிவி திப்பு இருக்கலாம். பிற பொருள்களுக்கு அந்தந்த மாநிலங்கள் வரிவிதித்துக் கொள்ளும் உரிமை வழங்கிட வேண்டும்.

நாட்டின் மொத்த வருவாயில் வரிவருவாய்தான் பெரும் பங்கு வகிக்கிறது. வரி இருவகையானது. ஒன்று நேரடி வரிவருவாய். மற்றொன்று மறைமுக வரி வருவாய். ஒரு நாட்டின் பெரும் பகுதி வருவாயை செல்வந்தர்களாக உள்ள தனிமனிதர்கள் செல்வம் கொழிக்கும் பெருநிறுவனங்கள் வழி ஈட்டுவதுதான் நல்ல வரிவிதிப்புக் கொள்கையுள்ள நாடாகக் கருதப் படும். ஒன்றியத்தின் ஒரு விழுக்காடு பேரில் சொத்தின் மதிப்பு நாட்டின் மொத்த மதிப்பில் 57 விழுக்காடு அளவுக்கு உள்ளது எனினும் அது அந்தந்தத் தனிமனிதனின் உழைப்பின் வழியாக ஈட்டியது அல்ல. ஆனால் நாட்டி லுள்ள உழவுத் தொழில் நெசவுத் தொழில் ஏனைய தொழில்களில் தம் உழைப்பை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈந்துள்ள உழைப்பாளர்கள் தொழிலாளிகள் பாட்டாளிகளால்தான் என்பதை ஓரளவேனும் பொருளாதாரம் அறிந்த எவரும் உணர்வர். இதன் அடிப்படையில்தான் அய்ரோப்பிய நாடுகள், அமெரிக்க, ஆத்திரேலியா, சப்பான், கனடா போன்ற இன்னும் வளர்ந்த நாடுகளும் ஏன் நம் நாட்டைப் போன்ற வளரும் நாடுகளும் நேரடிவரி மூலம் மொத்த வரிவருவாயில் 80-90 விழுக்காடு வரை வரிவருவாயை ஈட்டிவருகின்றன. வெறும் 10 விழுக்காடு அளவில்தான் வெகுமக்களாக உள்ள பெரும்பான்மையரிடம் வரிவசூலித்து வரப்படுகிறது.

ஆனால் இந்திய ஒன்றியம் தன் மொத்த வரு வாயில் 30-35 விழுக்காடு அளவில்தான் பெரும் செல்வந்தர்களிடமிருந்து நேரடி வரியாக வசூலித்து அவர்களை மகிழ்ச்சியாகவும் மனநிறைவாகவும் வாழச்

செய்து வருகிறோம் என்று பா.ச.க அரசு பெருமை பீற்றிக் கொள்கிறது. அதே நேரத்தில் மிகப் பெரும்பான் மையாக உள்ள எளிய மக்கள் பயன்படுத்தும் கடலை மிட்டாய், நல்ல கூரையுடன் கூடிய விடுதியில் உண்ப வர்களாக உள்ள இவர்களிடமிருந்து செல்வந்தன் ஏழை என்ற வேறுபாடின்றி ஒரே வரியை வசூலித்து இவர்களை வதைத்து வருகிறது. இந்த வரி விதிப்பு முறை மக்கள் மீது ஏவப்பட்ட வன்கொடுமைச் செயல். எனவே குறைந்தது முதலில் 60 விழுக்காடு வரி வருவாய் செல்வந்தர்களிடமிருந்து நேரடியாக வரு மான வரியாக ஈட்டப்பட வேண்டும். இது படிப்படியாக உயர்த்தப்பட்டு 90 விழுக்காட்டுக்கு மேல் ஆக்கப்பட்டு எளிய மக்களின் மீது விதிக்கும் மறைமுக வரியைக் கடுமையாக பெருமளவு குறைக்க வேண்டும்.

பொருளாதாரம் கடுமையாகச் சரிவுற்று வீழ்ச்சி யடைந்து நலிவுற்றுவரும் தற்போதைய சூழலில் பெரும்பான்மையாக உள்ள வெகுமக்களின் வாங்கும் திறனை அதிகப்படுத்தும் வகையில் அவர்கள் பணி புரியும் உழவுத்தொழில் நெசவுத்தொழில் குறுசிறு தொழில்களின் மேம்பாட்டுக்குப் பெரும் நிதி ஒதுக்கி ஊக்கப்படுத்தி அவர்களுக்கு வேலை தந்து உற்பத்தி யைப் பெருக்கமுனையாமல் ஏற்கனவே அவற்றிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டைப் பலவாறாகக் குறைத்து அவர்களின் வாழ்வை மேலும் சிதைத்து வருகிறது இந்தப் பா.ச.க அரசு. அதேவேளையில் இம்மக்களின் அடிப்படைத் தேவைக்கான உணவுப் பொருள்கள் பயன்பாட்டுப் பொருள்கள் மீது கடுமை யான மறைமுக வரியைச் சுமத்துகின்றது.

இன்னொரு பக்கம் நாட்டின் நிதி நிலையில் செலவுக்கும் வரவுக்கும் துண்டுவிழும் பெரும்பகுதி நிதியை அரசு நாட்டின் வெகுமக்கள் சொத்தான இலாபம் ஈட்டும் வாழ்நாள் காப்பிட்டுக் கழகம், பெல் போன்ற நிறுவனங்களின் பங்குகளைத் தனியாருக்கு விற்று ஈடுசெய்து வருகிறது. இன்னும் பொதுத்துறை நிறு வனங்களில் இழப்பில் இயங்குகின்றன என்ற பெயரால் சிலவற்றைத் தனியாருக்கு விற்றுப் நிதி ஈட்டுகிறது இந்த அரசு. உண்மையில் அவற்றை சீரமைக்க எந்த நடவடிக்கையும் அரசு எடுப்பதில்லை. இதே போன்று மக்கள் சேவைத் துறையான வெகுமக்களின் வரிப் பணத்தைக் கொண்டு அமைக்கப்பட்ட தொடர் வண்டித் துறையைப் படிப்படியாகத் தனியாருக்குத் தாரை வார்த்து வருகின்றது இந்த மக்கள் விரோத பா.ச.க அரசு. ஊரகப்பகுதிகளில் சொல்வார்கள் இளைஞர்களைப் பார்த்து ‘‘உங்கள் முன்னோர்களின் உயரிய உழைப் பால் உருவாக்கப்பட்ட சொத்துக்களை விற்று விற்று வெட்டியா அலைந்து தின்று தீர்க்கிறியே வீணாப் போனவனே’’ என்று. அதே போன்று காலமெல்லாம் பாதுகாத்து வந்த நாட்டின் சொத்துக்களை விற்று பெருநிறுவனங்களைக் கொழுக்க வைத்தும் விரயமும் செய்கின்றது இந்தக் காவிக்கூட்ட அரசு.

இதுவும் போதாது என்று செல்வந்தர்கள் வாட்டம் அடையகூடாது என்று தனிமனித வருமான வரி வரம்பை உயர்த்தி நேரடி வரிவருவாய் அளவை இலக்கம் கோடி ரூபாய் அளவில் குறைத்துவிட்டு எளிய மக்கள் மேல் மறைமுக வரியைச் சுமத்தி ஈடுசெய்து வருகின்றது. இவையன்றி இந்தியத் தலைமை வங்கி, காலம் காலமாய் வெகுமக்கள் வரிப்பணத்தில் சேமித்து வைக்கப்பட்டதிலிருந்து ரூ.1.60 இலக்கம் கோடியைச் சுரண்டி எடுத்து நூறு இருநூறு பெருநிறுவனங்களின் உற்பத்தியைப் பெருக்குவது எனச் சொல்லி அவர் களுக்குப் பங்கு போட்டுக் கொடுத்து ஊக்கப்படுத்துகிறது. இவ்வரசு இதேபோன்று பெருநிறுவன வரி அளவைக் குறைத்து அரசுக்கு ரூ.1.45 இலக்கம் கோடி அளவுக்கு வரி வருவாய் இழப்பு ஏற்படுத்தி அந்நிறுவனங்களை ஊக்குவிக்கிறது இந்தப் பாழாய்ப்போன பா.ச.க அரசு. உண்மைநிலை என்னவெனில் வெகுமக்களின் வாங்கும் திறனை படுபாதாளத்தில் வைத்துக் கொண்டு உற்பத்தியைப் பெருக்க பெருநிறுவனங்களுக்கு ஊக்கம் தர நிதி அளிப்பது அவர்களின் உற்பத்திப் பொருள்கள் விற்பனை குறைந்ததையடுத்து அவர்கள் பெற்ற இலாபம் குறையாமல் பார்த்துக்கொள்ள இந்தச் சீரமைப்பைச் செய்கிறது.

**சம்முக் காசுமீருக்குச் சிறப்பு உரிமை வழங்கும் விதி 35A, 370-ஐ நீக்கம் குடியுரிமைத் திருத்தச் சட்டம், தேசியக் குடிமக்கள் பதிவேடு, தேசிய மக்கள் பதிவேடு:**

பார்ப்பனச் சனாதன காவிக் கூட்ட இந்திய ஒன்றிய அரசு நாட்டு மக்களைச் சமயத்தின் பேரால் பிளவு படுத்தி, கூறுபோட்டு அவர்களிடையே வெறுப்புணர் வையும் வேற்றுமை உணர்வையும் ஊட்டி வளர்த்து, குறிப்பாக இந்நாட்டு இசுலாமியர்களுக்கு எதிராக இந்து மக்களை அவர்கள் மீது பகைமை உணர்வை ஏற் படுத்தும் வகையில் அவர்கள் பாக்கிசுத்தான் நாட்டுக்கு ஆதரவாளர்கள் போன்றும் இந்திய ஒன்றியத்திற்கு அவர்கள் எதிரானவர்கள் என்ற பொய்மையைக் கட்டி அமைத்தும் அண்டை நாடான பாக்கிசுத்தான் வங்க தேசம் ஆப்கானிசுத்தான் இந்துக்களுக்கு எதிரானவை, அங்கு வாழும் இசுலாமிய மக்கள் இந்திய ஒன்றியத்தின் பகைவர்கள் என்னும் பிம்பத்தை வேண்டுமென்றே இட்டுக்கட்டி உருவாக்கி இருவகுப்பினரிடையேயும் பகைமை வெறியூட்டி இங்கு எப்போதும் பதட்டநிலை யிலேயே நாட்டு மக்களை வைத்துக் கொள்வதையே குறிக் கோளாகக் கொண்டதாக எல்லாவழிகளிலும் செயல் பட்டு வருகின்றது.

நாடு 1947 விடுதலைக்கு முந்தைய காலத்தி லிருந்தே சம்மு காசுமீர் பகுதி ஒரு இறையாண்மை யுடனான தனிநாடாக ஆங்கிலேயர் ஆட்சியில் கீழ் இருந்து வந்தது. விடுதலை பெற்றதையடுத்து வெள்ளையரின் ஆட்சியின் கீழ் இருந்த பல்வேறு தனித்தனிச் சமசுத்தான அரசுகளை ஒரே இந்திய ஒன்றிய நாடு என்று அமைத்திடும் வகையில் அவை யெல்லாம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டன. அப்படி இணைவதற்குச் சம்மு காசுமீர் பகுதிக்குத் தனி சிறப்புரிமையளித்து இந்தியாவுடன் தற்காலிமாக சேர்க்கப்பட்டு பின்நாளில் அப்பகுதி மக்கள் பொது வாக்கெடுப்பு மூலம் அவர்கள் இசைவுடன் இந்தியா வுடனான இணைப்பை இறுதி செய்திடுவது என்ற உறுதிமொழியும் அளிக்கப்பட்டது. ஆனால் நடந்தது என்ன? அண்டை நாடான பாக்கிசுத்தானும் இந்திய ஒன்றியமும் இருநாடுகளின் எல்லையில் ஊடுருவி பதட்டநிலை ஏற்படுத்துகிறது என்று ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டும் அப்பகுதி இந்திய ஒன்றியத்துடன் இணைந்த ஒன்று இந்திய ஒன்றியமும் தங்களுக்கானது எனப் பாக்கிசுத்தானும் எதிரெதிரான நிலைபாடுகளைக் கொண்டிருந்தனர். திடீரென 2019 ஆகசுத்து 5ஆம் நாளன்று சம்மு காசுமீர் இந்தியாவுடன் ஒன்றிணைந்த நாடு எனச் சொல்லி அவர்களுக்குச் சிறப்பு உரிமை வழங்குவதில் அரசமைப்புச் சட்ட விதிகள் 35A 370 ஆகியவற்றை அரசமைப்புச் சட்டத்திலிருந்து நீக்கிவிட்டது இந்த ஒன்றிய பா.ச.க அரசு.

இதற்கு முன்பாகச் சம்மு காசுமீர் மாநிலத்தை ஒன்றிய அரசின் ஆட்சியின் கீழ் கொண்டுவந்து அது மாநில அரசு என்ற நிலை அகற்றப்பட்டுவிட்டது. அதையடுத்து அந்த மாநிலத்தில் எல்லாவித அரசியல் நடவடிக்கைகளையும் முடக்கும் வகையில் மாநிலக் கட்சித் தலைவர்கள் அனைவரின் இயக்கத்தையும் கட்டுப்படுத்தி முடக்கி வீட்டுச் சிறைக்குள் வைக்கப்பட்டு அனைத்துத் தொடர்புகளிலிருந்தும் துண்டிக்கப்பட் டுள்ளனர். இதை அய்கிய நாடுகள் அவை அய்ரோப்பிய ஒன்றிய அமைப்புகள் இது மனித உரிமை மீறல் ஒடுக்குமுறை என்று கடும் கண்டனம் தெரிவித்து அந்த மாநிலத்தை இயல்பு நிலைக்குக் கொண்டுவர வேண்டு மென இந்திய ஒன்றிய பா.ச.க அரசை வலியுறுத்தி வருகின்றன. அவை எதற்கும் செவிசாய்க்காமல் இது உள்நாட்டு விவகாரம் எனச் சொல்லி அம்மாநில மக்களை, தலைவர்களை நாட்டைத் துண்டித்து வைத்துக் கொள்வதைத் தொடர்கின்றது பா.ச.க ஒன்றிய அரசு. இதன் மூலம் எப்போதும் இந்திய ஒன்றியத்திடம் இருந்த காசுமீரை இப்போதுதான் இணைத்து கொண்டதுபோல் ஏக இந்தியா ஆக்கப்பட்டுவிட்டது எனப் பீற்றிக்கொண்டு வருகின்றது பா.ச.க அரசு. அரசமைப்புச் சட்டம் விதிகள் 35A 370 களின் நீக்கம் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என வழக்குத் தொடுக்கப்பட்டு உச்ச நீதிமன்றத்தில் இன்னும் எடுத்துக் கொள்ளப் படாமல் நிலுவையில் அதை வைத்துக் கொண்டு வருகின்றது. நாடு முழுவதும் இந்தச் செயலை எதிர்த்துக் குரல்கள் எழுந்தன. ஆனால் பெரிய அளவில் எதிர் வினையாக இயக்கங்கள் நிகழவில்லை.

இதைக் கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு 1971 இல் வங்காளதேசம் பாக்கிசுத்தானிடமிருந்து தனிநாடாகப் பிரித்தபோது அங்கிருந்து குடிபெயர்ந்து நாட்டின் எல்லை மாநிலமான அசாமில் குடியேறியவர்கள் மேலும் பல மாநிலத்தவர் அச்சாமில் குடியேறவிடாமல் அச்சாமியப் பண்பாடு சிதைகிறது எனவும் அதைக் காக்கும்பொருட்டு அச்சாமி அல்லாதவர் வெளியேற வேண்டுமென்று நெடும் போராட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டது. இந்தப் பின்னணியில் ஏற்கனவே உச்சநீதிமன்ற ஆணைப்படி தேசியக் குடிமக்கள் பதிவேடு தயாரிக்கக் குடியுரிமை வழங்குவதற்குக் குடியுரிமை திருத்தச் சட்டம் (கு.உ.தி.ச) நிறைவேற்றப் பட்டது. அதன்படி அண்டை நாடான வங்கதேசம் மட்டுமின்றி பாகிசுத்தான் ஆப்கானிசுத்தான் நாடுகள் மட்டுமிலிருந்து மத அடிப்படையில் துன்புறுத்தப்பட்டு அந்நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வெளியேறி இந்திய ஒன்றியத்திற்குள் குடியேறிய இசுலாம் சமயம் தவிர்த்த கிறித்துவம் புத்தம் என ஆறு சமயத்தவர்களுக்கு மட்டும் குடியுரிமை அளிக்கப்படும் என்று அரசு அறிவித்தது. இதற்கு நாடெங்கும் கடும் எதிர்ப்பும் கண்டன இயக் கங்களும் வெடித்தெழுந்து தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மத அடிப்படையில் குடியுரிமை வழங்கு வதற்கு முற்படுவது மக்களை மதத்தைக் கொண்டு வேறுபடுத்தி வெறுப்புணர்வை ஊட்டுவது என்பதுடன் குறிப்பாக இசுலாமியர்களைப் புறக்கணிக்கும் உள் நோக்கம் கொண்டது. அண்டை நாட்டவர் குடிபெயர் வதற்கு அந்நாட்டு இசுலாமிய அரசுகள் வன்மத்துடன் அந்நாட்டு இசுலாமியர் அல்லாதோரைத் துன்புறுத்து கின்றனர் என்கிற பொய்மையைக் கட்டமைக்கிறது ஒன்றிய அரசு என்பதேயன்றி வேறொன்றுமில்லை. அதனால் இசுலாமியர் அல்லாதார் மட்டும் குடிபெயர லாம் என்பதும் முற்றிலும் அறிவுக்கும் தருக்கத்திற்கும் பொருந்தாத காரணம். இசுலாமியரும் குடிபெயர்ந்து வரலாம். இன்னும் பல்வேறு காரணங்களாலும் மக்கள் குடிபெயர நேரலாம்.

மத அடிப்படையிலின்றி பல்வேறு காரணங் களாலும் மக்கள் துன்புறுத்தப்பட்டும் இருக்கலாம் அதனாலும் மக்கள் குடிபெயரக்கூடும் குடிபெயர்ந்து வந்த மக்கள் எந்த பாகுபாடுமின்றி அனைவரையும் அகதிகளாக ஏற்றுக் கொள்வதுதான் மனித உரிமை காக்கும் செயலாகும். இது உலக நாடுகளெல்லாம் கால மெல்லாம் கடைப்பிடித்துவரும் பொது நியதியாகும் பின் அவர்களுக்குக் குடியுரிமை வழங்குவதிலும் அவர்கள் நடவடிக்கைகளிலிருந்து அய்யத்திற்குரியவர்களாக கருதப்படுபவர்களுக்கின்றி ஏனையோர் அனைவருக்

கும் அவர்களும் மனிதர்கள் என்ற அடிப்படை மட்டும்தான் ஒரே காரணமாக இருக்க வேண்டும்.

இதைத்தான் இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டப் பிரிவு 14 எந்த மனிதனும் சட்டத்தின் முன் சமம் என்பதை அடிப்படை உரிமையாக வழங்குகிறது. இந்த விதி நாட்டுக் குடிமக்களை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எந்தத் தனிமனிதரையும் என்பதின் பொருள் குடியுரிமை பெறாதவரான எவரும் சட்டத்தின் முன் சமமாகக் கருதப்படவேண்டும் என்று அரச மைப்புச் சட்டம் வலியுறுத்துகிறது. எனவேதான் மக்களைப் பிளவு படுத்திக் கூறுபோடும் இந்த கு.உ.தி சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என நாடெங்கும் எழுச்சிமிகு போராட்டங்கள் தொடர்கின்றன. ஆனால் மக்கள் எழுச்சியைக் கருத்தில் கொள்ளாமல் இந்த பார்ப்பனக் காவிச் கூட்ட அரசு நயவஞ்சமாக மக்களிடையே மதவேறுபாட்டை நஞ்சாக விதைத்து சமூக நல்லிணக்கத்தைக் குலைத்து வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு ஒரு பதட்ட நிலையைத் திட்டமிட்டு உருவாக்கிக் கொண்டுவருகிறது. எனவே இந்த கு.உ.தி சட்டம் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்பதால் இது செல்லத் தக்கதல்ல என்று உச்சநீதிமனறம் தீர்ப்பு வழங்கும். இருப்பினும் இது பற்றித் தொடரப்பட்ட வழக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் நிலுவையில் வைத் துள்ளது. இதன் முக்கிய அவசர தன்மையைக் கருத்தில் கொண்டுள்ளதா என்ற அய்யம் எழாமலில்லை.

அச்சாமிற்கு மட்டுமின்றி தேசியக் குடிமக்கள் பதிவேடு (தே.கு.ப) நாடு முழுமைக்கும் தயாரிக்கப்படும் என்றும் அதற்குக் குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019 பொருந்தும் என்று அறிவித்தது பா.ச.க அரசு. இது நாட்டின் கூட்டாட்சித் தத்துவத்தைக் குலைப்பதற்காக பா.ச.க மேற்கொள்ளும் வஞ்சக முயற்சி. அதாவது மாநிலங்களின் இறையாண்மையை மறுத்து மத அடையாளத்தை முன்னிருத்திச் செயல்பட முற்படு கின்றனர். இதற்கு முன்னோடியாக தே.கு.ப சட்டத் தின்படி அந்தப் பதிவேட்டைத் தயாரிக்கத் தனியே வழிமுறைகள் வகுக்கப்பட முதலில் தயாரிக்கப்பட வேண்டும் எனச் செயல்பட்டு வருகின்றது. தே.கு. பதிவேடு தயாரிக்க மக்களிடம் விவரங்கள் சேகரிக்கப் படுகின்றன என்ற பெயரில் தே.ம.பதிவேடு தொடர்பான படிவத்தின் மக்களை மதவழியில் பிளவுபடுத்தும் வினாக்கள் இடம் பெற்றுள்ளன. இந்தக் கணக்கெடுப் பைப் பத்துக்கும் மேற்பட்ட மாநில அரசுகள் மறுத்து விட்டன. தமிழ்நாடும் அவ்வழியைப் பின்பற்றிட வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டு வருகின்றது. இறுதியாக நாடு முழுவதும் தேசிய மக்கள் கணக்கெடுப்பு முற்றிலும் கைவிடப்பட வேண்டும். அதேபோன்று அச்சாமிற்காக மட்டும் ஆய்வு மேற்கொண்டு தயாரிக் கப்பட்ட தேசியக் குடிமக்கள் பதிவேடு நாடு முழுமைக்கும் தேவையில்லை என்பதை அரசு உணர்ந்து அதைக் கைவிட வேண்டும்.

இதற்காக நாடெங்கும் போராட்டங்கள் நடந்து வருவதை ஒடுக்குவதற்கு ஒன்றிய அரசு தில்லி சகீன் பாக்கில் வன்முறையை கட்டவிழ்த்துவிட்டு 45 பேருக்கு மேல் பலிவாங்கியது. இது தொடர்பாக வன்முறைக் கட்டவிழ்த்து விட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரிய வழக்கில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி நாங்கள் இது போன்ற கொலைகளைத் தடுக்க முடியாது என்றும் அதற்கான ஏதுகள் தங்களிடம் இல்லை என்றும் சொல்லியுள்ளது. இது எந்தப் பொருளில் புரிந்து கொள் ளப்படும் என்பது பெரும்வினா. குடியுரிமை வழங்க வேண்டுமெனில் தற்போது நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் மதம் இனம் மொழி நாடு என எவ்விதப் பாகுபாடுமின்றி வழங்குவதாக அமையவேண்டும். இந்திய ஒன்றியத்திற்கு மட்டும் ஒரே இறையாண்மை என்பதன்றி அனைத்து மாநிலங்களின் இறையாண் மையும் இதன்படி உறுதி செய்யப்பட வேண்டும்.

இந்தப் பார்ப்பனியச் சனாதன காவிக் கும்பலான பா.ச.க அரசு, நாடு பொருளாதாரம், கல்வியில், மேம்பாடடைய, வெகுமக்கள் நலனை உறுதிப்படுத்தும் மருத்துவம் அளிப்பதில், பெண்களின் மதிப்புமிக வாழ்வை உறுதி செய்வதில், ஒட்டு மொத்த மக்கள் மேம்பாட்டுக் குறியீடு தற்போது தாழ்நிலையிலுள்ளதை உயர்த்தி உலகிலுள்ள வளர்ந்த இன்னும் வளரும் நாடுகள் எட்டிய மேனிலையை எய்த வேண்டிய பொறுப்பை எடுத்துக் கொள்ளாமல் எவ்வித மக்கள் நலம் மேம்பாடு உள்ளீடு இல்லாத வெற்றுக் கூடாக உள்ள குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019 (கு.தி.ச) தேசிய குடிமக்கள் பதிவேடு (தே.கு.ப) தேசிய மக்கள் பதிவேடு (தே.ம.ப) உள்ளிட்ட முதல் பத்தியில் சொல்லப்பட்டுள்ளவற்றைச் செயல்படுத்துவது எனச் சொல்லி மக்கள் உற்பத்தி ஆற்றலை மடைமாற்றிவிட்டு வெறும் வெறுப்பு காழ்ப்பு சகிப்பின்மை உணர்வு களைத் தூண்டிவிட்டு அதன் பெயரால் வன்முறை யைக் கட்டவிழ்த்துவிட்டு அமைதியற்ற பதட்டமான சூழ்நிலையை நாடெங்கும் ஏற்படுத்திவிட்டு மக்கள் பற்றற்ற பொறுப்பற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது அவர்கள் சனாதன மதவெறியில் மட்டும்தான் மூழ்கியுள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

இதுபோன்ற புல்லுருவிகளிடமிருந்து நாட்டை மக்களைக் காப்பாற்றி அமைதியான நிறைவான வாழ்வை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு மதநல்லிணக்கக் கோட்பாட்டையும் அனைவரும் சட்டத்தின் முன் சமம் என்ற கோட்பாட்டையும் உயிரென உயர்த்திப் பிடிக்கும் முற்போக்கு அமைப்புகளுக்கும் இடதுசாரி சிந்தனையுள்ள இயக்கங்கள், அமைப்புகள், கட்சிகள் ஆகியவற்றுக்குத்தான் உள்ளன என்பதை உணர்ந்து இவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஒன்றிணைந்து செயல்திட்டங்கள் வகுத்து வெற்றி கிட்டும் வரை தொடர் போராட்டங்கள் நிகழ்த்திக் கொண்டிருக்க வேண்டும். ●

# சாகீன்பாக்கின் ஒளிவிளக்குகள் தரும் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும்

- ஹரிஷ் காரே
தமிழாக்கம் : **க. முகிலன்**

*மிச்சிறந்த சனநாயக நடவடிக்கையைச் சீர்குலைத்திட, தங்களைத் தலைவர்களாகக் காட்டிக் கொள்ளும் ஆட்சியாளர்களையும் வெறிக்கும்பலையும் அனுமதிக்கக்கூடாது.*

புதிய இந்தியாவைக் காண்பிக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் தான் அமெரிக்காவின் குடியரசுத் தலைவரை அழைத்திருப்பார்கள். ஆனால் மத்திய காலத்தின் பகைமைச் சிந்தனைகளில் மூழ்கிக் கிடக்கும் பழைய இந்தியாவையே அமெரிக்கக் குடியரசுத் தலைவர் காண நேரிட்டது. இது டொனால்டு டிரம்பின் இந்தியப் பயணத்தைச் சீர்குலைப்பதற்கான சதி என்று ஆளும் கட்சியான பா.ச.க.வில் சிலர் கூறுகின்றனர். அப்படியானால், அரசு செய்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் அரசு நிர்வாக அலகுகளும் தோல்வியடைந்துவிட்டன என்றே சொல்ல வேண்டும். இத்தகைய தோல்வி கடந்த சில ஆண்டுகளாகவே ஏற்பட்டு வருகிறது. சமுதாயத்தின் மனக்குறைகளைப் போக்கவும், இணக்கமான சூழலை உருவாக்கவும் தங்களை மீட்பர்களாகப் பறைசாற்றிக் கொள்ளும் வன்நெஞ்ச அரசியல்வாதிகள் உரிய நடவடிக்கை எடுக்காததால் இத்தோல்விகள் மேலும் தீவிரமடையும்.

### சாகீன்பாக் இயக்கத்தைச் சட்டப் புறம்பான தாக்கிட முயலுதல் :

தில்லியில் கடந்த சில நாள்களில் நிகழ்த்தப்பட்ட திட்டமிட்ட கொடிய வன்முறைச் செயல்கள் அவர்களின் நோக்கம் என்ன என்பதை உறுதி செய்கின்றன. தவறான-பாகுபாடு காட்டுகின்ற 2019-ஆம் ஆண்டின் குடிஉரிமைத் திருத்தச் சட்ட எதிர்ப்பின் குறியீடாகத் திகழும் சாகீன்பாக் போராட்டத்தைச் சட்டத்திற்குப் புறம்பானதாக ஆக்கிட வேண்டும் என்று துடித்தனர். அச்சுறுத்தல்களுக்கோ, நயவஞ்சகமான இனிய சொற்களுக்கோ அடிபணியாமல் தில்லியின் நடுங்கும் குளிரையும் பொருட்படுத்தாமல் இரவும் பகலும் சாகீன்பாக்கில் அமர்ந்து தொடர்ந்து போராடிவரும் இசுலாமியப் பெண்களைப் பார்த்து நாடே வியக்கிறது.

தங்கள் குடிஉரிமையையும் மதச் சிறுபான்மை என்கிற உரிமையையும் நிலைநாட்டிட தேசிய அடையாளங்களாகக் கருதப்படும் அரசமைப்புச் சட்டம், தேசியக்கொடி, தேசிய கீதம் ஆகியவற்றைத் தங்கள் கைகளிலும் நெஞ்சங்களிலும் ஏந்தி புதுமையான போராட்டத்தை முதியோரும் இளையோரும் என இணைந்து முசுலீம் பெண்கள் சாகீன்பாக்கில் போராடி வருகின்றனர், முசுலீம் பெண்களே இப்போராட்டத்தில் பெருமளவில் கலந்து கொண்ட போதிலும் சாகீன்பாக்




போராட்டம் மதச்சார்பற்ற ஒன்றாகவே பார்க்கப்பட்டது. புதுவகையான இக்குடிமைப் போராட்டம் அறநெறியின் ஒளியாகச் சுடர்ந்தது. அதனால் உலக அளவில் ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தது. சாகீன்பாக் போராட்டத்தின் தாக்கத்தைப் "புதிய இந்தியாவின்" ஆட்சியாளர்கள் கண்டறிவதற்கு முன்னரே, இந்தியா முழுவதும் பெருநகரங்களிலும் சிறிய நகரங்களிலும் சாகீன்பாக் வடிவிலான எண்ணற்ற போராட்டங்கள் உருவெடுத்தன. புது வடிவிலான இந்த எதிர்ப்பு இயக்கம் அரசியல் தளத்தில் முதன்மை பெற்றது. விதிகளையும் ஊடகங்களையும் நாட்டின் சிந்தனைப் போக்கையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தவர்களுக்கு சாகீன்பாக் போராட்டம் எரிச்சலூட்டியது.

அரசியலில் மதரீதியிலான அணிதிரட்டலை உள்நோக்கமாகக் கொண்டு தேர்ந்த மதிநுட்பத்துடன் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை உருவாக்கிவிட்டதாகக் கருதிக் கொண்டிருந்தவர்களுக்கு அமைதியாக நடைபெற்ற சாகீன்பாக் போராட்டம் கடும் சினமூட்டியது. தங்களை நவீன சாணக்கியர்களாகக் கருதிக் கொள்ளும் இவர்கள் சாகீன்பாக் போராட்டத்தை வெறும் "முசுலீம்களின் எதிர்ப்பாக" மட்டும் காட்ட முயன்றனர். ஆனால் அதில் தோல்வியுற்றதால் இவர்கள் மேலும் சினமுற்றனர், எந்தவொரு அரசியல் எதிர்ப்பையும் சனநாயகத்திற்கான போராட்டத்தையும் அரசின் ஒடுக்குமுறை மூலம் அடக்கிவிடலாம் என்று நம்பிக் கொண்டிருந்த நம்முடைய புதிய ஆட்சியாளர்களுக்கு சாகீன்பாக் பெரும் கலக்கத்தையும் அவமானத்தையும் தருவதாக அமைந்துவிட்டது. குடியாட்சியின் விழுமியங்களையும்

மதச்சார்பற்ற முழக்கங்களையும் முன்னிறுத்தி நடத்தப் படும் சாகீன்பாக் போராட்டம் 'புதிய இந்தியாவின்' நிர்வாகிகளின் கண்களுக்குத் தத்துவ வகையில் பெரும் உறுத்தலாக இருக்கிறது.

**தேர்தலில் எதிர்பாராத் தோல்விக்குப்பின்**

தில்லி சட்டமன்றத் தேர்தலில் கட்டாயம் வெற்றி பெறுவோம் என்று பா.ச.க. தலைமை நம்பியது. உள்துறை அமைச்சர் மட்டுமின்றி இந்தியா முழுவதிலி ருந்தும் பா.ச.க. தலைவர்கள் தில்லியில் தீவிரமாகத் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். 'தேசபக்தி' உணர்ச்சியைத் தூண்டினர். சாகீன்பாக் போராட்டக் காரர்களுக்குச் சரியான பாடம் புகட்டுங்கள் என்று வாக்காளர்களுக்கு அறைகூவல் விடுத்தனர். மத அடிப்படையில் அணிதிரட்டும் பா.ச.க.வின் அரசியல், அதன் தலைவர்களின் புகழ் ஆகியவற்றின் மீதான கருத்துக் கணிப்பாகவே தில்லி சட்டமன்றத் தேர்தலை முன்னிறுத்தினர். ஆனால் தில்லி வாக்காளர்கள் பா.ச.க. வின் எதிர்பார்ப்பை உறுதியாகவும் திட்டவட்டமாகவும் முறியடித்தனர். படுதோல்வி அடைந்த போதிலும், தலைக் குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோல் பா.ச.க. தலைவர்கள் கடந்த சட்டமன்றத் தேர்தலைவிட தங்கள் வாக்கு விழுக்காடு உயர்ந்திருப்ப தாகக் கூறினர். அதன்பின், சாகீன்பாக் போராட்டத் தைக் குலைப்பதற்கான வேலையில் ஈடுபடத் தொடங் கினர். பா.ச.க. தலைவர் கபில் மிஸ்ரா, ஜாஃப்ரா பாத்தில் குடியுரிமைச் சட்டத் திருத்தத்திற்கு எதிராகத் தொடர் போராட்டம் நடத்துவோரை சாலையிலிருந்து உடனடியாக அகற்ற வேண்டும்; இல்லையேல் நாங் களே அகற்றுவோம் என்று காவல்துறைக்கு எச்சரிக்கை விடுத்தார்.

சாகீன்பாக் போன்ற போராட்ட வடிவங்களை மரபான முசுலீம் தலைமை விரும்பவில்லை என்பதை பா.ச.க. தலைமை நுட்பமாகக் கணித்திருந்தது. சாகீன்பாக் போராட்டக்களத்தில் பெண்களே முன்னிலை வகித்தனர். முல்லாக்களும், இமாம்களும், மவுல்விகளும பின்னுக்குத் தள்ளப்பட்டனர். சாகீன்பாக் போராட்ட வடிவம் முசுலீம் சமூகத்தின் மரபான தலைமைக்கு ஒரு சவாலாக இருந்தது போலவே சங்பரிவாரங்களுக்கும் இருந்தது. மரபான முசுலீம் தலைவர்கள், முசுலீம் பெண்கள் மீதான தங்கள் கட்டுப்பாட்டை இழந்தது குறித்தும், உச்சநீதிமன்றம் அனுப்பிய சமரசக் குழுவினர் தங்களிடம் பேசாமல், சாகீன்பாக் போராட்டக் களத்தில் இருந்த பெண்களிடம் மட்டுமே பேசியது குறித்தும் மனம் வெதும்பினர்.

சாகீன்பாக்கிலிருந்து சில மைல்களுக்கு அப்பால், யோகி ஆதித்தியநாத் முதலமைச்சராக உள்ள உத்தரப் பிரதேசத்தில் குடியுரிமைச் சட்டத் திருத்தத்திற்கு எதிராகப் போராடுவோர் காவல்துறையால் காட்டுமிராண்டித்




தனமாக ஒடுக்கப்படுகின்றனர் என்பதை பா.ச.க. தலைவர்கள் நன்கு அறிவார்கள். முசுலீம் சமுதாயத்தினர் மீது காவல்துறையினரால் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடிய தாக்குதல்கள் பற்றிய விவரங்கள் யமுனை ஆற்றுக்கும் அப்பால் பல பகுதிகளையும் சென்றடைந்தன. இந்நிலையில் அறவழியில் அமைதியான முறையில் சாகீன்பாக்கில் நடக்கும் போராட்டம் எந்த அளவுக்கு வெற்றி பெறும் என்கிற அய்யத்தை எழுப்பியது. இதைவிடக் கேடான நிலை என்னவெனில், பழிவாங்கும் எண்ணத்துடன் ஆதித்தியநாத் ஆட்சி செய்த கொடுமை களைக் கட்டுப்படுத்த அரசமைப்பின் எந்தவொரு நிறுவனமும் முயலவில்லை என்பதாகும். முசுலீம்களுக்கு எதிரான மனப்போக்குடன் பொறுக்கிகள் போல் காவல் துறையினர் நடத்திய கொடுஞ்செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் நீதித்துறையோ, உ.பி.யின் அரசியல் கட்சி களோ, ஊடகத் துறையோ, குடிமை சமூகமோ செயல்பட வில்லை. அதனால் முசுலீம்களின் வாழ்விடங்களில் சினமும் கையறு நிலையும் ஒருசேர நிலவியது.

முற்றிலும் முரண்பட்ட இரண்டு பிரிவுகளின் உணர்வுகளும் சந்திக்கும் ஓர் இடம் உண்டு; நியாய மான, ஒற்றுமையான சாகீன்பாக் போராட்டத்தையும் அதன் மதச்சார்பற்ற போக்கினையும் குலைக்க வேண்டும்; அரசமைப்புச் சட்டத்தைக் கையிலேந்தி போராடும் அக்கூட்டத்தைக் கலைத்து அதை வெறிச் செயலில் ஈடுபடும் கும்பலாக மாற்ற வேண்டும். கடந்த கிழமையின் இறுதியில் தில்லியில் இரண்டு முரண் பட்ட கூறுகளின் சந்திப்பு பெரும் கலவரமாக வெடித்தது.

2002-இல் குசராத் கலவரத்தை நடத்தியவர்கள் தெருக்களில் வன்முறை வெறியாட்டத்தை நிகழ்த்து வதில் தாங்கள் வல்லவர்கள் என்று நினைத்தார்கள் போலிருக்கிறது, எதையும் நயவஞ்சகமாகக் கையாள் வதில் கைதேர்ந்தவர்களான சங் பரிவாரங்கள், 1984-இல் தில்லியில் சீக்கியர்களுக்கு எதிராக நடந்த




வகுப்புக் கலவரத்திற்குப்பின், மீண்டும் இப்போது முழு வீச்சிலான வகுப்பு மோதல் நடந்தது பற்றி மனநிறை வடைவார்கள். மேலும் இந்து-முசுலீம் பிரிவினை என்பது மீண்டும் முன்னிலை பெற்றிருப்பதற்காகவும், இது தேர்தல் அரசியலில் ஆதாயம் அளிக்கும் என்பதற் காகவும் மகிழ்ச்சியடைவார்கள்,

**பிளவுபடுத்தும் போக்கை வீழ்த்துதல் :**

நேருவின் ஆட்சிக் காலத்தில் கட்டமைக்கப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லுதல், பன்மைத்துவத்தைப் புரத்தல் முதலான கூறுகளை ஒழிக்க வேண்டும் என்று வெளிப்படையாகச் செயல் படும் மோடியின் ஆட்சியில் தில்லி வகுப்புக் கலவரம் நிகழ்ந்தது எதிர்பாராத ஒன்றல்ல; ஆயினும் நம்முன் உள்ள சவால்களை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்; “இந்த நாடு இந்துக்களுக்கு மட்டுமே சொந்தமானது” என்கிற அரசியலை முறியடிக்கக் கூடிய வல்லமை நம்முடைய அரசமைப்பு நிறுவனங்களுக்கும் அதன் உள்கட்டமைப்புகளுக்கும் இருக்கிறதா? சமூகம் ஆழ மாகப் பிளவுபடுதல் என்பது சகிப்பின்மையற்ற வெறிக் கும்பலுக்குப் பயன்தரலாம். ஆயினும் மக்களைப் பிளவுபடுத்தும் இந்த ஆட்சியை, அதனுடைய வக்கிர மான கொள்கைகளை, அதனடிப்படையில் அது முன் னெடுக்கும் செயற்பாடுகளைத் தோற்கடிக்க வேண்டியது நம்முடைய சனநாயகக் கட்டமைப்புகளின் நீங்காக் கடமையாக உள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதி தீபக் குப்தா இச்சிக்கலின் மய்யம் எது என்று அடையாளங் கண்டு தன் கருத்தைக் கூறியுள்ளார். “பெரும்பான்மையின் ஆட்சி என்பது சனநாயகத்தின் பிரிக்க முடியாத பகுதி ஆகும். அதே சமயம் பெரும்பான்மைவாதம் என்பது சன நாயகக் கோட்பாட்டுக்கு எதிரானதாகும்” என்று நீதிபதி தீபக் குப்தா கருத்துரைத்தார். மேலும் அவர் ஒரு கருத்தை வலியுறுத்தினார் : ஒரு அரசியல் கட்சி தேர் தலில் 51 விழுக்காடு வாக்குகள் பெற்று ஆட்சி அமைக் கலாம். ஆனால் அதன் பொருள் மற்ற 49 விழுக்காட்டி னர் சட்டப்படியான எந்த அதிகாரமும் அற்றவர்களாக அடுத்த அய்ந்தாண்டுகளுக்கு அடங்கி இருக்க வேண்டும் என்பதன்று. இந்த எளிய உண்மை அனைவரும் அறிந்த ஒன்றேயாகும். ஆயினும் நீதிபதி தீபக் குப்தா இதை நமக்கு மீண்டும் நினைவூட்டுகிறார் - உயர் நிலையில் உள்ள குடியரசுத் தலைவர் - பிரதமர் முதல் கீழ் நிலையில் உள்ள காவல்துறையின் காவலர் வரை உள்ள ஒவ்வொரு அலுவலரும் இந்தியாவில் உள்ள அனைத்துக் குடிமக்களின் நலன்களுக்காகப் பணியாற்ற வேண்டும் என்கிற கடமையை இந்திய அரசமைப்புச் சட்டம் விதித்துள்ளது.

இந்த அடிப்படையில் செயல்படுமாறு சாகீன்பாக் போராட்டம் கோருகிறது. சிறுபான்மையினரின் குறை களையும் கவலைகளையும் போக்குவதற்கு இந்திய சனநாயகக் கட்டமைப்பு அமைதியான வழிமுறையில் தீர்வு காணும் என்கிற எதிர்பார்ப்பையும் நம்பிக்கை யையும் சாகீன்பாக் போராட்டம் மய்யமாகக் கொண்டி ருக்கிறது. சனநாயகத்தின் விழுமியங்களையும் நம்பிக் கையையும் உயர்த்திப் பிடிக்கும் சாகீன்பாக் போராட் டத்தை, தில்லியில் கட்டவிழ்த்து விடப்பட்டது போன்ற வன்முறை மூலம் ஒடுக்குவது என்பது இந்திய சன நாயகத்துக்கு மீளாத் துயரமாக முடியும்.

(குறிப்பு : 28.2.2020 அன்று ‘தி இந்து‘ ஆங்கில நாளேட்டில் தில்லியின் மூத்த பத்திரிகையாளர் ஹரிஷ் காரே எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்)

# இந்தியப் பொருளாதாரத்தின் முதன்மை அமைப்புகள் சீர்குலைகின்றனவா?

குட்டுவன்

பொருளாதாரம் இயங்குவதற்கு முதன்மையான சில பொருளாதார அமைப்புகள் எல்லா நாடுகளிலும் பெரும் பங்காற்றி வருகின்றன. வங்கிகளை மேலாண்மைச் செய்வதற்கும் நாட்டினுடைய வங்கிக் கொள்கையைச் சீராய்வு செய்வதற்கும் பண மதிப்பை நிலைநிறுத்துவதற்கும் ஒவ்வொரு நாட்டினுடைய தலைமை வங்கி பெரும் பணிகளைச் செய்கிறது. இந்தத் தலைமை வங்கியைப் பல நாடுகளில் பல்வேறு பெயர்களில் அழைக்கின்றனர். அமெரிக்கா சுவிட்சர் லாந்து கனடா ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் கூட்டரசு தலைமை வங்கி என அழைக்கிறார்கள். இத்தகைய தலைமை வங்கிகள் தன்னாட்சியுடன் அரசியல் குறுக்கீடுகளின்றிச் செயல்படுகின்றன.

அமெரிக்கப் பொருளாதாரம் கடந்த 70 ஆண்டு களாக ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தாலும் அமெரிக் காவின் நாணயமான டாலரின் மதிப்பில்தான் உலகின் 90 விழுக்காடு ஏற்றுமதி இறக்குமதிகள் செய்யப்படு கின்றன. இதற்குப் பல அரசியல் காரணங்கள் இருந் தாலும் முதன்மையான காரணம் அமெரிக்க டாலரின் மதிப்பைத் தனித்த பாங்கோடு அமெரிக்காவினுடைய கூட்டரசு தலைமை வங்கி சிறப்பாக மேலாண்மைச் செய்வதே காரணமாகச் சுட்டப்படுகிறது. அவ்வங்கியின் தலைமைப் பொறுப்பை ஏற்பவர் சிறந்த கல்வியாள ராகவும் பொருளாதார நிபுணராகவும் வங்கியியல் அறிஞராகவும் இருக்க வேண்டும். பல அமெரிக்கப் பொருளாதார அறிஞர்கள் இவ்வங்கியில் பணியாற்றிய பெருமைக்குரியவர்கள். இந்தியாவில் இந்திய மைய வங்கி சுயாட்சித் தன்மையுடன் செயல்படும் விதத்தில் உருவாக்கப்பட்டது. இந்திய மைய வங்கி தனியார் வங்கியாக பிரித்தானிய ஆட்சியில் 1935ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்திய விடுதலைக்குப் பிறகு 1949ஆம் ஆண்டு நாட்டுடமையாக்கப்பட்ட வங்கியாக இம் மைய வங்கி மாற்றப்பட்டது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வரைவுப் பிரிவின் தலைவர் அண்ணல் அம்பேத்கர் எனப் போற்றப் படுகிறார். ஆனால் அண்ணல் அம்பேத்கர் மாபெரும் பொருளாதார அறிஞர் என்பதைப் பலர் அறிந்திருந் தாலும் இந்திய மைய வங்கி சிறப்பாகச் செயல்படு வதற்கு அவர்தான் காரணமானவர் என்பதைப் பலர் மறைத்து விட்டனர். இலண்டன் பல்கலைக் கழகத்தில் அம்பேத்கர் இந்திய ரூபாய் மதிப்பு என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அம்பேத்கர் ஆய்ந்து எடுத்து முடிவுகள் அவர் போற்றிய இங்கிலாந்து நாட்டின் பொருளாதாரப் பேரறிஞர் ராபர்ட்சன் கருத்துகளுக்கு எதிரானதாக அமைந்தது. இருப்பினும் அண்ணல் அம்பேத்கர் அவரது ஆய்வுக்கட்டுரையை நூலாக வெளியிட்ட போது ராபர்ட்சன்னிடம்தான் அணிந்துரைப் பெற்றார். அண்ணல் அம்பேத்கர் அளித்த வங்கியியல் தொடர்பான நெறிமுறைகளும் வரையறைகளும்தான் இந்திய மையவங்கி உருவாவதற்கு அடிப்படைக் காரணங்களாகும். இத்தகைய செயற்கரிய பங்களிப்பை இந்திய மைய வங்கி 2017அம் ஆண்டு தனது 82ஆம் ஆண்டு நிறுவன நாளில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் படத்தோடு வெளியிட்டு நினைவுக் கூர்ந்து பெருமைப்படுத்தியது. அவ்வறிவிப்பில் இந்திய மைய வங்கி அண்ணல் அம்பேத்கர் ஆய்வுக் கட்டுரையில் கருத்துருவாக்கம் செய்த நெறிகளின்படிதான் அதன் செயல்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.. இந்நாளில் பொருளாதாரப் பேரறிஞர் என்ற முறையிலும் மானுட உரிமைகளின் போராளி என்ற முறையிலும் இவ்வங்கி உருவாக்கத்திற்கு அயராது பாடுபட்ட அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு நன்றியை உரித்தாக்குகிறது என்று மேலும் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் அம்பேத்கர் வலியுறுத்திய இட ஒதுக்கீடு கொள்கையையும் அரசமைப்புச் சட்ட நெறிகளையும் ஒரு பக்கத்தில் காலில் போட்டு மிதித்து மறு பக்கத்தில் அறிஞர் அம்பேத்கருக்கு இங்கிலாந்தில் நினைவுச் சின்னம் என்று அறிவித்து பிரதமர் மோடியும் அவரின் எடுபிடிகளும் அண்ணல் அம்பேத்கரைப் போற்றுவது பார்ப்பன ஏமாற்று நரித் தந்திரமாகும் என எல்லாரும் உணர வேண்டும். இன்றைய பா.ச.க அரசு இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உயர் நெறிகளை எப்படிச் சீரழித்து வருகிறதோ அவ்வகையிலேயே தன்னாட்சி யுடைய மைய வங்கியின் உயர் நெறிகளையும் தன் னாட்சி அதிகாரங்களையும் சிதைத்து வருகிறது.

பாசக அரசு இந்திய மைய வங்கியின் நெறிகளுக்கு ஏற்ப பணியாற்றிய ரகுராம் ராஜனைப் பதவியில் நீட்டிக்கச் செய்யாமல் பல இடையுறுகளைச் செய்து வெளியேற்றியது. அதற்கு முதன்மையான காரணம் பொதுத் துறை வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெற்ற பெரும் முதலாளித்துவ நிறுவனங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தாமல் பல இலட்சங் கோடி ரூபாய் களைச் சூறையாடியதைத் தடுப்பதற்கு ரகுராம் ராஜன் எடுத்து நடவடிக்கைகளே காரணம் எனச் சுட்டப்படு கிறது. மேலும் ரூ.1000 ரூ.500 பணத்தாள்களை

மதிப்பிழக்கச் செய்யும் நடவடிக்கைக்கு எதிராக இரகுராம் ராஜன் பல கருத்துகளை அளித்ததால் அவருக்குப் பதவி நீடிப்பு அளிக்காமல் குசராத்திய அம்பானிக்கு உறவின ரான உர்ஜித் பட்டேலை இந்திய மைய வங்கியின் ஆளுநராக நியமித்தது குசராத்திய மோடி அரசு. பணமதிப்பிழப்பு நடவடிக்கை படுதோல்வியடைந்து இந்தியப் பொருளாதாரம் சரிவை நோக்கிப் பயணிக்கிற நேரத்தில் இந்திய மைய வங்கியிலிருந்து ஒரு இலட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாயை இந்திய அரசு அழுத்தம் அளித்துப் பெற்றது. இது தொடர்பான பல விமர்சனங்கள் வெளி வந்தன. தொடர்ந்து இந்திய மையவங்கியின் தன்னாட்சியைப் பறிக்கும் செயலில் ஒன்றிய அரசு ஈடுபட்டதால் உர்ஜித் பட்டேலே தனது பதவியைத் துறந்தார்.

மேற்கூறிய தொகையைப் பெறுவதற்காகவே பொருளாதாரமே படிக்காத வரலாற்றுத் துறையில் பட்டம் பெற்ற வங்கியியல் தொடர்பாக எந்தவித ஆய்வும் மேற்கொள்ளாத இந்திய ஆட்சிப் பணித்துறை யைச் சேர்ந்த சக்திகாந்த தாசை இந்திய மைய வங்கியின் ஆளுநராக ஒன்றிய அரசு நியமித்தது. இவர்தான் இந்தப் பெரும் தொகையை ஒன்றிய அரசிற்கு தாரை வார்த்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் பொருளாதார நிதி கட்டமைப்பிற்குப் பெரும் துணையாக இருப்பது இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகமாகும். தற்போது இதன் நிதி சொத்து மதிப்பு 31 இலட்சம் கோடி ரூபாய்க்கு மேலாகும். இந்திய வாழ்நாள் கழகம் 1956ஆம் ஆண்டு நேரு பிரதமராக இருந்த போது நாட்டுடமையாக்கப்பட்டது. 1956ஆம் ஆண்டுக்கு முன் பல தனியார் நிறுவனங்கள் இத் துறையில் இயங்கி வந்தன. நாட்டுடமையாக்கப்பட்ட பிறகு இந்திய வாழ்நாள் காப்பீட்டுக் கழகம் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது. 2019ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி இக்கழகத்தில் 29 கோடி மக்கள் உறுப்பினர்களாக இருந்து அளித்து வருகிறார்கள். குழந்தை முதல் முதியோர் வரை அனைவருக்கும் காப்பீட்டுத் திட்டங்களைத் தொடர்ந்து வழங்கி அவர்களது வாழ்நாள் காலத் தேவைகளை வெற்றி கரமாக நிறைவேற்றி வருகிறது. நடுத்தர வர்க்கத்தினர் அரசு பொதுத் துறை தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் நம்பிக்கையுடன் தங்க ளுடைய ஆண்டு மாத தொகைகளைச் செலுத்தி வருகின்றனர். இந்திய வாழ்நாள் காப்பீட்டுக் கழகம் ஒன்றிய மாநில அரசுகளின் பல திட்டங்களுக்குப் பல ஆயிரம் கோடி ரூபாய் கடன்களைக் குறைந்த வட்டியில் அளித்து நாட்டின் ஒட்டு மொத்தப் பொருளாதார வளர்ச்சியில் பங்காற்றி வருகிறது.

1990 ஆம் ஆண்டிற்குப் பிறகு தாராளமயம் தனியார்மயம் உலகமயம் எனும் பொருளாதார சீர்த்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டதால் இந்தியாவில் பல தனியார் பன்னாட்டு காப்பீட்டு நிறுவனங்கள் இயங்குவதற்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்தது. இருப்பினும் இன்றும் மக்களின் நம்பிக் கையைப் பெற்ற ஒரே ஆயுள் காப்பீட்டு நிறுவனமாக இந்திய வாழ்நாள் காப்பீட்டுக் கழகம் உள்ளது. இதன் பங்குகளைத் தனியார்க்கு விற்பது நாட்டு துரோகத் திற்கு இணையானது எனப் பலர் கடுமையான முறையில் தங்கள் கருத்துகளை வெளியிட்டு வருகின்ற னர். இந்தியக் காங்கிரசு, இடதுசாரி கட்சிகள், திமுக, திரிணாமுல், காங்கிரசு உட்பட பெருமபான்மையானக் கட்சிகள் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் 2020-21 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகப் பங்குகளைத் தனி யார்க்கு விற்பது தொடர்பான தங்களது கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்தியப் பொருளாதார வீழ்ச்சிக்குத் தனியார் துறையின் செயல்பாடுகளே ஒரு பெரும் காரணமாக அமைந்து வருகிறது. ஏற்கெனவே பொதுத் துறை வணிக வங்கிகளின் பல இலட்சம் கோடி ரூபாய்களைச் சூறையாடிவிட்டு வெளிநாட்டிற்குத் தப்பியோடிய பலர் இன்றும் அந்நாடுகளில் உல்லாசமாக வலம் வரு கின்றனர் என்பதை அடிக்கடி ஒளி, அச்சு ஊடகங்கள் தெரிவித்து வருகின்றன. இச் சூழலில் இந்தியப் பொரு ளாதார வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உறுதுணை யாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்திய வாழ்நாள் காப்பீட்டுக் கழகத்தின் ஆயுளை முடிப்பதற்கு மோடி அரசு முற்படுகிறது எனப் பலர் அச்சத்தோடு தெரிவித்து வருகின்றனர். 3 இலட்சத்து 33 ஆயிரம் கோடி ரூபாய் வருவாயை இந்தியப் பொருளாதாரத்திற்கு வழங்கி ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்க்கு வேலைவாய்ப்புகளை அளித்துப் பெரும் இலாபத்தில் இயங்கி வரும் இந்தக் காப்பீட்டுக் கழகத்தைத் தனியாரிடம் அடமானம் வைப்பது மேலும் பொருளாதாரச் சிக்கல்களை உரு வாக்கி இந்தியப் பொருளாதாரம் மேலும் விரைவான சரிவைச் சந்திக்கும்.

பல பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து வரும் இக்காலக்கட்டத்தில் இவற்றை எல்லாம் மூடி மறைத்து இந்தியப் பொருளாதாரம் பல துறைகளில் வெற்றியைக் கண்டு வருகிறது என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறுவது 21ஆம் நூற்றாண்டின் பெரும் நகைச்சுவையாகும். 2020-21 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நாடாளுமன்றத்தில் அறிவிப்பதற்கு முதல்நாள் பெருளாதார ஆய்வு அறிக்கை 2019-20 வெளியிடப்பட்டது. திட்டமிட்டுப் பல கருத்துகள் முன் வைக்கப்பட்டுள்ளன. முதல் தொகுதியில் 10 தலைப்பு களிலும் இரண்டாம் தொகுதியில் 10 தலைப்புகளிலும்

பல பொருளாதாரப் புள்ளிவிவரங்களும் கருத்துருக் களும் தரப்பட்டுள்ளன. இதன் முதன்மை நோக்கமே இந்த அறிக்கையை யாரும் படித்துப் புரிந்து கொள்ளக் கூடாது என்ற நோக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. நாட்டின் ஒட்டு மொத்த வருமானம் வேலைவாய்ப்பைப் பெருக்குவது வணிகச் சூழல்களை மேம்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் 50ஆம் ஆண்டு நிறைவு அவற்றின் பங்களிப்பு வங்கிகள் அல்லாத நிதி அமைப்புகளில் காணப்படும் நிதிப் பாதுகாப்பற்ற நிலை தனியார்மய மாக்கலும் செல்வத்தை உருவாக்குதலும் இந்திய நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் காணப்படும் நிலை.

இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு போன்ற தலைப்புகளில் இந்தியப் பொருளாதாரத்தினுடைய ஏற்றத்தாழ்வுகள் நெளிவு சுழிவுகள், நெகிழ்ச்சிகள் வீழ்ச்சிகள் என்ற பிரித்தானிய ஆங்கில மொழி நடையில் வழங்கப்பட்டுள்ளன. இதில் ஒவ்வொரு தலைப்பிலும் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்யும் மாணவர்கள் போடும் படங்கள் புள்ளிவிவர அட்ட வணைகள் வளைகோடுகள் ஆகியன வழங்கப்பட் டுள்ளன. முதல் பகுதியில் திருவள்ளுவரைத் தமிழில் சுட்டிவிட்டுப் பிறகு அர்த்தசாஸ்திரம், ரிக், வேதம், பகவத் கீதை உட்பட இந்துத்துவா கருத்துகளையும் திறமை யான திருட்டுத்தனத்தைப் புகுத்தி இரு தொகுதிகளில் பொருளாதார ஆய்வு அறிக்கை (2019-20) வெளியிடப் பட்டுள்ளது.

இதைக் குறிப்பிடுவதற்கு முதற்காரணம் இந்த ஆய்வறிக்கையில் சுட்டப்படும் எல்லாப் புள்ளிவிவரங் களும் இந்தியாவின் புள்ளிவிவர அமைப்புகளான மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையம், தேசிய புள்ளிவிவர அமைப்பு ஒன்றிய அரசின் புள்ளிவிவர நிறுவனம் நாட்டினுடைய குற்றவியல் நடவடிக்கை அறிக்கை போன்ற பல புள்ளிவிவரங்களைச் சேகரித்து சீரமைக்கும் நிறுவனங்களில் மோடி அரசு பல தில்லுமுல்லுகளைச் செய்து வருகிறது என்பதை 2020 பிப்ரவரி பொருளாதார அரசியல் வார இதழில் ஒன்றிய அரசின் புள்ளிவிவர ஆணையத்தின் முன்னாள் தலைவரும் தேசிய புள்ளிவிவர குழுவின் முன்னாள் தலைவருமான பிரணாப் சென் ஒரு கட்டுரையில் சொல்லியுள்ளார். இந்தக் கட்டுரையில் இந்தியப் பொருளாதாரத்தின் பல தரவுகளை ஆளுங்கட்சிக்குச் சார்பாக மாற்றி புள்ளிவிவரங்களை உயர்த்தி மதிப்பீடு செய்து பெரும் குழப்பங்களை ஒன்றிய அரசு செய்து வருகிறது என்பதைப் பல ஆதாரங்களுடன் சுட்டியுள் ளார். புள்ளிவிவரத் துறைகளின் தன்னாட்சி எவ்வாறு சிதைக்கப்படுகிறது என்பதையும் சிறந்த புள்ளிவிவர நிபுணர்களின் கருத்துகள் புறந்தள்ளப்படுகின்றன என்பதையும் குறித்துள்ளார். இத்துறையிலும் ஒன்றிய அரசு பொய்யான தரவுகளையும் தகவல்களையும் மக்களுக்கு அளித்துச் செயல்படுகிறது. இதற்கெல்லாம் முதன்மையான காரணம் என்ன? இந்தியப் பொருளா தாரம் சரிவிலிருந்து வெகு விரைவில் மீட்டெடுக்கப் படும் என்ற நம்பிக்கை எல்லாத் தரப்பு மக்களிடமும் சிதைந்து வருகிறது.

சான்றாக பணமதிப்பிழப்பு நடவடிக்கையும் சரக்குச் சேவை வரி விதிப்பு முறையும் இந்தியப் பொருளாதாரத் தையும் மாநிலங்களின் தன்னுரிமையையும் வெட்டி வீழ்த்தியது. அப்போது அதைத் திசைத் திருப்ப காஷ்மீர் மாநில சிறப்பு அரசமைப்புச் சட்ட 370வது பிரிவை நீக்கி காஷ்மீர் அரசியல் தலைவர்களைக் கைது செய்து மக்களைப் பெரும் துன்பத்திற்கு உள்ளாக்கியது. ஊடகங்கள் இந்தத் திசைத் திருப்பல் நாடகத்திற்குத் துணை போயின. மக்களாட்சியின் மாண்புகள் சிதைக்கப்படுகின்றன. 2019ஆம் ஆண்டு இரண்டாம் முறையாக மோடி பிரதமர் பதவி ஏற்ற பிறகு மற்றொரு திசைத் திருப்பும் நாடகம் அரங்கேற்றப்படுகிறது. 2019ஆம் ஆண்டில் மட்டும் 70 இலட்சம் இளைஞர்கள் வேலைவாய்ப்புகளை இழந்துள்ளனர்.

15ஆவது நிதிக்குழுவின் பரிந்துரைப்படி மாநிலங் களுக்கு அளிக்க வேண்டிய நிலுவைத்தொகையையும் சரக்குச் சேவை வரி இழப்பைச் சரிகட்ட மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய நிதித்தொகையையும் அளிக்க முடியாமல் ஒன்றிய அரசு தள்ளாடி வருகிறது. ஏழ்மையும் ஏற்றத்தாழ்வுகளும்தான் இந்தியாவின் பொருளாதார அடையாளங்களாக இன்று உள்ளன.

இந்த உண்மைகளை மறைப்பதற்கு தற்போது இந்தியக் குடியுரிமைச் சட்டத் திருத்தம், தேசிய குடியுரிமை பதிவேடு தேசிய மக்கள்தொகைப் பதிவேடு, என்ற பெயரில் இசுலாமியர்க்கு எதிராகவும் இலங்கைத் தமிழர்க்கு எதிராகவும் இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள மதச்சார்பின்மைக்கு எதிராகவும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வீழ்ந்து வரும் பொருளாதாரத்தை மக்கள் உணராமல் திசை திருப்பும் மக்கள் விரோத சனநாயக விரோத அரசியல் சட்ட விரோத நடவடிக்கைகள்தான் மேற்கொள்ளப்படு கின்றன. இவைகளை உச்ச நீதிமன்றமும் கண்டும் காணாமலும் இருப்பது நீதித் துறையின் மாண்புகளும் சீரழிந்து வருகின்றனவா? என்ற பேரச்சம் எழுந் துள்ளது. இதுதான் இந்திய ஆட்சியியலின் முதன்மை நோக்கமா? என்ற கேள்வி எழுகிறது. இந்தியாவின் முதன்மையான பொருளாதார சமூக அரசியல் கட்டமைப்பு நிறுவனங்களையும் அவற்றின் தன்னாட் சிக் கூறுகளையும் சிதைத்து வருவது இந்தியாவைப் பிளவுப்படுத்தும் நோக்கமா? என்ற கேள்வியும் எழுகிறது.

# மனுதர்மம் மாயை அல்ல – மெய்ம்மையே!

- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**

14-2-2020 வெள்ளிக்கிழமை அன்று கோதை ஜோதிலட்சுமி அவர்கள் ‘மனுதர்மமும் சில மாயைகளும்’ என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை தினமணியில் வெளியாகி இருந்தது. அக்கட்டுரையில், ‘பொதுவாக இரு பெருங்குற்றச்சாட்டுகள் மனுவின் மீது வைக்கப்படுகின்றன. வர்ணக் கட்டமைப்பை உருவாக்கிச் சமூகத்தில் ஏற்றத்தாழ்வை உண்டாக்குவது; மற்றொன்று, பெண்களை இழிவுபடுத்தும் நூல் என்ற குற்றச்சாட்டு’ எனக் குறிப்பிட்டிருக்கிறார். அதுகுறித்து இங்கே உருவாக்கப்பட்டிருக்கும் மாயையைப் புரிந்து கொள்ளச் சொல்கிறார்.

மனுநூல் முழுக்கப் படித்தால், அவ்விரண்டு குற்றச்சாட்டுகளும் உண்மையே என்பது புலனாகும். இவ்வுலகம் பிராமணர்களுக்காகவே படைக்கப்பட்டது போன்ற எண்ணத்தை அந்நூல் உருவாக்குகிறது. மனு கூறுவதை இங்கே எடுத்துக்காட்டுகிறேன் : “புருச தேகம் சுத்தமானது. இடைக்கு மேல் மிகவும் தூய்மையாகும். எனவே பிரம்மாவின் முகம் பெரிதும் தூயது. மிக்க தூயதான முகத்திலிருந்து வெளிப்பட்டமையினாலும் வேதங்களைப் பெற்றிருப்பதனாலும் முதலில் தோன்றினமையினாலும் படைக்கப்பட்ட யாவற்றினும் அந்தணன் சிறந்து விளங்குகின்றான். பிறவி மேன்மையினாலும் முகத்திலிருந்து உதித்த தகுதியினாலும் படைப்புலகில் காணப்படா நின்ற சகலத்தையும் தனது செல்வமாகக் கொள்ளத்தக்கவனாக விளங்குகிறான். எனவே அவன் பிறரிடமிருந்து பெறுகின்ற உணவு, உடை, பொருள் யாவும் அவனுடைமையை அவன் பெறுவதாகவும், ஏனையோர் அவனுடைமையைப் பெற்றுய்வோராயுமிருக்கிறார்கள்.

ஏவலரான மக்கள் (நாலாம் வருணத்தார்) மேலே சொன்ன மூவர்க்கும் பொறாமையின்றிப் பணிபுரிதல் ஒன்றையே முதன்மையாகக் கொள்ளக் கடவரென்றும், ஈதல் முதலிய சத்கருமங்களும் அவர்களுக்கு உண்டெ”ன்றும், பணித்தார் (மனு : அத்தியாயம் 1, சுலோகம் 91, 92, 93, 100, 101).

மேலும் மனு கூறுகிறார் : “இது (இந்நூல்) இந்தச் சாத்திரத்தின் பயனறியவல்ல பிராம்மணனாலே ஓதத்தக்கது. தனது சீடர்களுக்கு முறைப்படி ஓதுவிக்கத் தக்கது. ஏனையோர் ஓதுதல் கூடாது” (மனு. அத்.1 சுலோ.103). வேதமே சுருதியென்றும், அறத்துணிபுகளே சுமிருதியென்றும் உணர்க. தார்க்கீக உலகியல் அறிவைக் கொண்டு இவற்றைச் சோதித்தறிய முயல்வது கூடாது. ஏனெனில் சீவர்க்குக் கடமைகள் என்பதே இல்லை.

இவ்விரண்டையும் தனது நூலறிவினாலும் தர்க்கவாதத் திறமையினாலும் சோதித்துச் சோதித்து அவமதிப்போன் யாராயினும் அவன் நாத்திகனாகவும் சமூகத்திலிருந்து விலக்கப்பட வேண்டியவனாகவும் ஆகிறான் (மனு.2 : சுலோ.10, 11).

மேற்கண்ட மனுநூல் கூற்றை ஆய்ந்த பெரியார், மனுநூல் சமூகத்தில் வர்ணக் கட்டமைப்பு, ஏற்றத்தாழ்வை உண்டாக்குவது எனக் குற்றஞ்சாட்டியது தவறா? பெரியார், வேதங்களையும் சுமிருதிகளையும் ஆய்ந்து மனுநூலின் சமூக முரண்களையும் சாதிப் பாகுபாட்டு முரண்களையும் எடுத்துக்காட்டினார் என்றால் அவர் நாத்திகரா? அவரைச் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்க வேண்டுமா? அவர் நாத்திகராகவே ஆனார். ஏன் என்பதை அறிந்துகொள்வீரா? ஆண்டாண்டுக்காலமாக மிதிபட்டு, அடிபட்டுக் கிடந்த நாலாம் சாதியின் அவமான அவலத்தைக் கண்டுணர்ந்து ஆத்திக்கத்தின் மேலாண்மையை வெறுத்து நாத்திகராக வெகுண்டெழுந்தார். அதனால்தான் நாலாம் சாதி விழித்தது. முன்னேற்ற விடியல் கண்டது.

அடுத்து, மனுநூல் பெண்களைப் போற்றுகிறது என்று அக்கட்டுரையாளர் கூறுகிறார். அதை நானும் படித்திருக்கிறேன். அதே நூல் பெண்களை இழிவுபடுத்தியுள்ளதையும் கட்டுரையாளர் அறிந்துகொள்ள வேண்டும்.

“ஆண் சந்ததியில்லாமல் பெண் குழந்தைகளே ஈன்ற குலத்தில் பெண் எடுக்கலாகாது. தாரகை, மரம், ஆறு, ஈனசாதி, மலை, பறவை, வேலைக்காரன் இவற்றின் பெயருடையவள், பயங்கரமான பெயரினள், இவ்வகைக் கன்னியரையும் மணத்தலாகாது. அழகியும், நற்பெயருடையவளும், அன்னம், பிடிநடையுடையவளும் மெல்லுடல், மென்பற்கள், மென்கூந்தல் உடையவளும், மென்குரலினளுமான பெண்ணை மணக்கலாகும்” (மனு. அத்.3. சுலோ.7, 9, 10).

நட்சத்திரா (தாரகை) என்றொரு பெயருடைய பெண் (நடிகை) இருக்கிறார். அவர் திருமணம் செய்து கொள்ளலாமா? வேண்டாமா?

மண்டோதரி என்ற பயங்கரமான பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் சேலம் சாரதா கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றார். அவர் கணேசன் என்பவரை மணந்து இல்லறத் தலைவியாக விளங்கினார்.

அழகியும் நற்பெயருடையவளும், அன்னம், பிடிநடையுடையவளும் என்னும் இவ்விலக்கணமுடைய

பெண்ணை மணக்கலாகும் என்றால், அவ்விலக்கண மில்லாத பெண்கள் என்ன ஆவார்கள்?

''தனது வருணத்துப் பெண்ணை மணம் புரிவிப்பது நன்று. விரும்பி இரண்டாம் திருமணம் செய்வதாயின் நாலாம் வருணத்தர் தமது சாதியிலும், அந்தணன் நான்கு வருணங்களிலும் பெண் கொள்ளலாம். தாழ் குலத்துப் பெண்ணுடன் ஒரே படுக்கையில் சமமாய்ப் படுக்கும் அந்தணன் நரகம் அடைவான். தாழ்ந்த சாதிப் பெண்ணின் அதர பானமும் அவளது மூச்சுக் காற்று மேலே படுதலும், தனக்கு அவளிடமாகப் பிறந்த குழந்தைக்கும் கழுவாயே இல்லாத பாவங்களாகும்'' (மனு.அத்.3, சுலோ.12, 13, 17, 19).

நாலாம் வருணத்தர் இரண்டாம் திருமணம் செய்ய விரும்பினாலும் தமது சாதியில் மட்டும்தான் பெண் கொள்ள வேண்டும். மனுநீதி போன்ற நூல்களால் சாதிப் பாகுபட்டுக் கொடுமை இன்றும் வேரூன்றிப் போயிருப்பதால், தாழ்குலத்துப் பெண்ணோ, ஆணோ தன்னைவிட மேல் குலத்து ஆணையோ, பெண்ணையோ காதலித்தாலும், திருமணம் செய்துகொண்டாலும், அந்தப் பெண்ணோ ஆணோ கொல்லப்படுவர் என்ற ஆணவக் கொலைகள் இன்றும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

''ஒரே பாத்திரத்தில் மனைவியுடன் உண்ணுதல் கூடாது. தலையில் சூடிய மலரைத் தானே எடுத்தெறியலாகாது. எந்தப் பருவத்தினளாயினும், தனது இல்லத்திலே கூட எந்தப் பெண்ணும் தன்னிச்சைப்படி எச்செயலும் இயற்றலாகாது. இளமையில் தகப்பன், பருவத்தில் கணவன், விதவையான பின் பிள்ளைகள் இவர்கள் காவலின்றிப் பெண்கள் தம்மிச்சையாக இயங்கலாகாது. இழி நடத்தை, பரத்தையர் நட்பு, நற்குணமின்மை இவற்றை உடையவனாயினும் கற்பினளான பெண் தன் கணவனைத் தெய்வமாகப் பேணுக'' (மனு. அத்.4, சுலோ.43, 55; அத்.5, சுலோ.147, 148, 154).

மனுநீதி எப்போது எழுதப்பட்டது என்பதற்குச் சான்றுகள் ஏதுமில்லை என்று அக்கட்டுரையாளர் கூறுகிறார். போர்களையும் அதன் வழிமுறைகளையும் விரிவாக மனு பேசுகிறது. அதனால் மனுவின் காலத்தில் போர்கள் நிறைய நடந்திருக்கின்றன. அத்தகைய காலத்தில் பெண் தனித்தியங்குவது பாதுகாப்பற்றது என்பதால், பெண்கள் தனித்து இயங்குவதை மனு மறுக்கிறது என்பதும் புரிந்துகொள்ளக் கூடியதே என்றும் அவ் ஆசிரியர் கூறுகிறார்.

போர் என்பது தொன்றுதொட்டு இன்றுவரையில் நடந்துகொண்டே இருக்கிறது. அதற்கு, என்று முடிவு ஏற்படும் என்று யாராலும் சொல்ல முடியாது. ஆனால் ஆண்-பெண் காதலுறவு, ஒழுகலாறு அன்றாடம் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. எக்காலத்திலும் இது நிகழக் கூடியதே. இதற்கு முற்றுப்புள்ளி என்பது எப்போதும் கிடையாது. அதனால் மனு ஐந்தாவது அத்தியாயத்தில் தனிமனித ஒழுகலாறாக - மாதர்க்கு உரியவை என்ற பகுதியில் எந்தப் பருவத்தினளாயினும் எந்தப் பெண்ணும் தன்னிச்சைப்படி எச்செயலும் இயற்றலாகாது. இளமையில் தந்தை, பருவத்தில் கணவன், விதவையான பின் மக்கள் இவர்கள் காவலின்றிப் பெண்கள் தம்மிச்சையாக இயங்கலாகாது என்று கூறுகிறார். ஏழாம் அத்தியாயத்தில்தான் அரசநீதி என்னும் பகுதியில் போர் அறம், போர் முறை, தானை, முற்றுகை, போரிடல், வெற்றி கொள்ளல் என்னும் அரசனுக்குரியவற்றை மனு குறிப்பிடுகிறார். போர்க்கால நெருக்கடிகள் இருந்தாலும்கூட காதலுறவு, தடைசெய்ய முடியாத (தனிப்பேருணர்வு) கொண்டதாகும். போர் வீரர்கள், தோல்வியுற்ற நாட்டிலுள்ள பெண்களைச் சிறைப்பிடிப்பது, கணவன் முன்னிலையிலேயே கூட்டு வன்புணர்வு செய்வதெல்லாம் ஆற்றக் கூடியவர்கள் என்பதை எல்லோரும் அறிவர். அதனால் மனு, பெண்கள் தம் இச்சையாக இயங்கலாகாது எனத் தனிப்பட்ட பெண்ணின் ஒழுகலாறாகவே வலியுறுத்தி, தந்தை, கணவன், பிள்ளைகள் காவல் கட்டுப்பாட்டைப் பெண்களுக்கு விதிக்கிறார் என்று கொள்க.

மேலும் மனு பெண்களின் இயல்பைக் கூறும்போது நமக்கே நெஞ்சம் கசக்கிறது. ''நிறை பிறழ்தலும், நிலையில்லா மனமும் நண்பின்மையும் மாதர் தம் இயல்பாவதால், கணவனால் நன்கு போற்றிப் புரக்கப்படும் போதும் அவர்கள் கணவனின் காவலை விரும்புவதில்லை. படுக்கை, ஆதளம், அழகு செய்தல், காமம், சினம், பொய், துரோக எண்ணம் இவற்றை மாதரின் பொருட்டே மனு படைத்தார். பொய்யைப் போல் மாசு வடுவினராக மாதர் இயன்றிருக்கின்றனர். பெரும்பாலும் மாதர் கற்பிலார் என்றே பெரிதும் பல நூல்களிலும் கூறப்படுவனவற்றைக் கேட்பீராக'' (மனு. அத்.9, சுலோ.15, 17, 18, 19).

''பீஜம் (ஆண்குறி) யோநி (பெண்ணுறுப்பு) இவ்வி ரண்டையும் நோக்குமிடத்து, பீஜம் உயர்வு. ஏனெனில் தோன்றும் உயிர் அனைத்தும் அதன் தன்மையைச் சார்ந்திருக்கிறது. சான்றாக விதைக்கும் விதை அதே பயிரை அந்த நிலத்தில் விளைவிக்கிறது அல்லவா? நிலம் சிறப்பில்லை என்று அறிய, எல்லாத் தாவரங்களும் வித்தின் அடையாளமின்றி மண்ணின் அடையாளத்தைக் கொண்டிருப்பதில்லை'' (மனு. அத்.9, சுலோ.35, 36, 37).

மேற்கூறிய மனுவின் கருத்துகள் பெண்களைப் பற்றியவை. இக்கருத்துகள் பெண்களை-பெண்மையை இழிவுபடுத்தக் கூடியவையாக இல்லையா? அதுவும் பெண்ணுறுப்பு, காதலுக்கு வழி வைப்பதோடு, குழந்

தைகளைப் பிறப்பிக்கும் சிறப்பும் பெற்றதன்றோ? அது உயர்வற்றது என்று கூறுவது பெண்மையையே இழிவு படுத்துவது ஆகாதா?

பெண் விடுதலையை, பெண்ணுரிமையை வலி யுறுத்திப் பேசிய பெரியார், மனு நூல் பெண்களை இழிவுபடுத்துவது என்று குற்றம் சாற்றியது தவறா? ஒரு நூலைத் திறனாய்வு செய்யும் போது நடுவு நிலைமை வேண்டும். நிறை குறைந்து அல்லது நிறைந்து காணப்பட்டாலும், குறைகள் அந்த நிறைகளை விழுங்கி விடும் வகையில் காணப்பட்டால் அது குற்றம் தானே?

எனவே மனுநூல் பற்றி இரு பெருங்குற்றச்சாட்டு கள் கூறி மனுவைப் பற்றி மாயைகள் சிலவற்றை, மதம் பரப்ப வந்த வெளிநாட்டாரும், இறைமறுப்புக் கொண்ட உள்நாட்டரும் ஏற்படுத்திவிட்டனர் எனக் கட்டுரை ஆசிரியர் கூறுவதை ஏற்க இயலாது. மாயை என்பதை விடுத்து மெய்ம்மை என்பதை ஏற்பது அறிவுடைமையாகும். ●

## இரா. பரமேசுவரி மறைந்தார்!



விளாத்திகுளம், கரிசல்குளம் இரா. இராசபாண்டியன் அவர்களின் துணைவியாரும் **சிந்தனையாளன் ஆசிரியர் குழு உறுப்பினர் முனைவர் முத்தமிழ்** அவர்களின் அத்தை யாருமான இரா. பரமேசுவரி அம்மை யார் உடல்நலம் குன்றியிருந்த நிலையில் மருத்துவம் பலனின்றி 05.02.2020இல் சென்னை இராசீவ்காந்தி பொது மருத்துவ மனையில் முடிவெய்தினார். உடனடியாக அன்னாரின் கண்கள் கொடையளிக்கப்பட்டு, அம்மையின் உடல் பள்ளிக்கரணையில் இளைய மகள் தேவி முனைவர் முத்தமிழ் இல்லத்தில் உறவினர் பார்வைக்கு வைக்கப்பட்டு, 06.02.2020 காலை 9.00 மணிக்கு இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் ஆய்வு நிறுவனத் துக்குக் கொடையளிக்கப்பட்டது.

மா.பெ.பொ.க பொதுச்செயலாளர் தோழர் வே. ஆனைமுத்து, ஆனை. பன்னீர்செல்வம், துணைப் பொதுச் செயலாளர் துரைசித்தார்த்தன், வாலாசா வல்லவன், இரா. பச்சமலை, கு. தொல்காப்பியன், சிலம்பரசன், பகுத்தறிவாளன் தமிழக மக்கள் முன்னணித் தோழர் பொழிலன், தோழர் குணத்தொகையன் மற்றும் பல தோழர்கள் நேரில் வந்திருந்து அம்மையின் துணைவர் இராசபாண்டியன், மகள்கள் தேவி, இராசலட்சுமி மேகலா மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

முனைவர் முத்தமிழ் அவர்களின் இயக்கப் பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்கி தோழர் ஆனைமுத்து மீது அளவற்ற மதிப்பு கொண்டிருந்த அம்மையார் பரமேசுவரி அவர்களுக்கு சிந்தனையாளன் ஆசிரியர் குழுவின் சார்பில் வீர வணக்கம் செலுத்துகிறோம்.

## கு.ம. சுப்பிரமணியன் மறைவு இரங்கல் கூட்டம்



திருச்சி சிந்தனையாளர் கழகத் தலைவரும், தமிழ்நாடு மின்வாரியத் தலைமைப் பொறியாளர் பணிநிறைவு பெற்றவரும் ஆன பொறிஞர் கு.ம. சுப்பிரமணியன் அவர்கள் தம் 87-ஆம் அகவை யில் திருச்சியில் தம் இல்லத்தில் 26-1-2020 அன்று தன் பிறந்த நாளைக் கொண்டாடிய மகிழ்ச்சி மறைவதற்கு முன்னால் அன்று இரவு தம் இல்லத்தில் மறைவுற்றார். 28.01.2020 அன்று காலை 9 மணிக்கு அன்னாரை நினைவு கூர்ந்து முத்து முருகன் தலைமையில் கு.ம.சு. அவர்கள் இல்லத்தில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

பேராசிரியர் முனைவர் க. நெடுஞ்செழியன், மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் தி. துரை சித்தார்த்தன், மா.பெ.பொ.க. பொதுச் செயலாளரும் திருச்சி சிந்தனையாளர் கழகச் செயலாளருமான வே. ஆனைமுத்து, உலகத் தமிழர் பேரமைப்பு துணைத் தலைவரும் வழக்குரைஞருமான மணவை ம. பொன்னிறைவன் ஆகியோர் மறைந்த கு.ம.சு. அவர்களின் செயற்கரிய செயல்கள் பற்றி நினைவு கூர்ந்து உரையாற்றினர். சிந்தனையாளர் கழகப் பணியாளரும், திருச்சி மாவட்ட மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளருமான இரா. கலியபெருமாள் நன்றியுரையாற்றினார். காலை 10 மணிக்கு கூட்டம் முடிவுற்றது. பின்னர் கு.ம.சு. அவர்களுடைய உடல் திருச்சி பொன்னகர் மின் மயான இடுகாட்டில் நண்பர்கள், உறவினர்கள் புடைசூழ எரியூட்டப்பட்டது.

## ‘ஆசிட்’ தியாகராசன் மறைவு



தந்தை பெரியாருக்கு நீதிமன்றம் 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்த திற்கு ஆத்திரமடைந்து அரசு வழக்குரை ஞர்கள் பார்ப்பனத் முகத்தில் ஆசிட் விசிய பெரியார் தொண்டர்தான் இந்த தியாக ராசன். இவர் பெரியார் கொள்கைகளைத் தன்னளவிலேயே தீவிரமாகவுப் பரப்புரை மேற்கொண்டிருந்தார். இந்தப் பெரியார் கொள்கை மறவர் தம் 94ஆம் அகவையில் 26.02.2020 அன்று மறைந்தார். அவருக்கு மா.பெ.பொ.க. வீரவணக்கம் செலுத்துகிறது.

### அம்பேத்கர் 1920 சனவரி 31 அன்று தொடங்கிய

# ‘மூக்நாயக்’ ஏட்டின் நூற்றாண்டு

- க. முகிலன்

பறவைக்கு இறக்கை எப்படி இன்றியமையாததோ அது போல் மக்கள் தலைவனுக்கு என ஏடு இருக்க வேண்டும் என்று மேதை அம்பேத்கர் கருதினார்.

அம்பேத்கர் மராத்தி மொழியில் தொடங்கிய முதலாவது ஏட்டின் பெயர் “மூக் நாயக்” என்பதாகும். இதற்கு ‘ஊமை களின் தலைவன்’ என்று பொருள். 1920 சனவரி 31 அன்று மூக்நாயக்கின் முதல் இதழ் வெளிவந்தது. மாதம் இருமுறை இதழாக வெளி வந்தது. 2020 சனவரியுடன் மூக்நாயக் இதழ் தொடங்கி நூறு ஆண்டுகள் ஆகின்றன.

அம்பேத்கர் எத்தகைய நெருக்கடியான வாழ்க்கைச் சூழலில் மூக்நாயக் இதழைத் தொடங்கினார் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். 1913-1917 காலத்தில் அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் அம்பேத்கர் எம்.ஏ., பி.எச்டி., பட்டங்களைப் பெற்றபின், இலண்டனில் உள்ள பொருளாதாரக் கல்லூரியில் பொருளாதாரத்தில் முனைவர் பட்ட ஆய்வை மேற் கொண்டார். அந்நிலையில் அம்பேத்கருக்குப் பரோடா சிற்றரசு அளித்துவந்த கல்வி உதவித் தொகை பார்ப்ப னர்களின் சூழ்ச்சியால் நிறுத்தப்பட்டது. அதனால் அந்த ஆய்வைப் பாதியிலேயே விட்டுவிட்டு இந்தியாவுக்குத் திரும்பினார்.

மீண்டும் இலண்டன் சென்று தன் ஆய்வை முடிப்பதற்குத் தேவையான பணத்தைத் திரட்டுவதற்காகப் பம்பாயில் சைடன்ஹாம் கல்லூரியில் அரசியல் பொருளாதாரத் துறை யில் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார். 1918-19-ஆம் ஆண்டுகளில் சவுத்பரோ குழு இந்தியாவில் பல தரப்பினரின் கருத்துகளைக் கேட்டறிந்தது. 27-1-1919 அன்று அம்பேத்கர் சவுத் பரோ குழுவினரிடம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனி வாக்காளர் தொகுதி வேண்டும் என்கிற கோரிக் கையை முன்வைத்தார். அப்போது செய்தி ஏடுகள் அவருக்கு உரிய இடமளிக்கவில்லை. அதனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கென தனியாக ஏடு தொடங்க வேண்டும் என்று முடிவெடுத்தார். இதை அறிந்த கோல்காப்பூரின் சிற்றரசர் சத்திரபதி சாகு அம்பேத்கரின் இல்லத்துக்கு வந்து ரூ.2500 நன்கொடை வழங்கினார்.

மூக்நாயக் இதழ் தொடங்கப்பட்ட போது. பாலகங் காதர திலகரின் ‘கேசரி’ ஏட்டிற்கு மூன்று உருபா பணம் அனுப்பி விளம்பரம் வெளியிடுமாறு அம்பேத்கர் கேட்டார். மூக்நாயக் இதழ் பற்றி விளம்பரம் செய்ய மறுத்து, பணத்தைத் திருப்பி அனுப்பியது ‘கேசரி’. நிதி நெருக்கடியும் மேல்சாதியினரின் புறக்கணிப்பும் இருந்த போதிலும் அம்பேத்கர் மனம் தளராமல் 1920 சனவரி 31 அன்று மூக்நாயக் முதல் இதழை வெளியிட்டார். அம்முதல் இதழில் அம்பேத்கர் எழுதிய ஆசிரியவுரையின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.




मूकनायक

“இந்திய சமூகத்தை ஆய்வு செய்யும் எவருக்கும் அதன் கட்டமைப்பில் திட்டவட்டமான-தனித்தன்மையான ஏற்றத் தாழ்வுகள் இருப்பது புலனாகும். இத்த கைய ஏற்றத்தாழ்வு களில் மிகவும் நாணத்தக்கதாக இருப்பது பொருளியல் வாழ்நிலையில் உள்ள கடுமையான ஏற்றத்தாழ்வே ஆகும்.

இந்தியர்களுக்கிடையே பலவகையான வேறுபாடு கள் உள்ளன. ஆயினும், உடல் தோற்றம் அல்லது அறிவு நிலை யிலான வேறுபாடுகளைவிட மதம் சார்ந்த வேறுபாடுகள் கொடிய அச்சுறுத்தலாக இருக்கின்றன. மதம் அடிப்படை யிலான வேறுபாடுகள் பல சமயங்களில் குருதி சிந்தும் மோதல் நடவடிக்கைகளாக உருவெடுக்கின்றன. இந்துக்கள், பார்சிகள், யூதர்கள், முசுலீம்கள், கிறித்தவர்கள் மற்றும் பிற மதப் பிரிவினர் ஆகியோர்க்கு இடையிலான வேறுபாடுகள் பல வடிவங்களில் இருக் கின்றன. ஆனால் இந்து மதத்திற்குள் உள்ள பிரிவுகளுக் கிடையே உள்ள வேறுபாடுகள் நம்ப முடியாத அளவுக்குக் கொடுமையானவையாகவும் கண்டனத்துக்குரியதாகவும் இருக்கின்றன.

எந்தவொரு அய்ரோப்பியனையும் நோக்கி ‘நீ யார்?’ என்று கேட்டால்-மொழி அடிப்படையிலான தன்னுடைய நாட்டைக் குறிக்கும் வகையில் - ஆங்கிலேயன் அல்லது செருமானியன் அல்லது பிரெஞ்சுக்காரன் அல்லது இத்தாலியன் என்று விடை கூறுவான். அதுவே நிறைவான விடையாக அமைந்துவிடுகிறது. ஆனால் இந்துக்களைப் பொறுத்த வரையில், “நான் ஒரு இந்து” என்று சொல்லுவது மட்டுமே போதுமான விடையாக இருப்பதில்லை. எந்தவொரு இந்து வுக்கும் தன்னுடைய திட்டவட்டமான அடையாளமாக உள்ள சாதியைச் சொன்னால்தான் முழுமையான விடையாக அமையும்.

இந்துச் சமூகம் சாதிகளால் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சாதிகள் மேல்-கீழ் என்கிற படிநிலை அமைப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்துச் சமூகம் ஒரு கோபுரம் போன்றது.




அதன் ஒவ்வொரு அடுக்கும் ஒரு சாதிக்கென ஒதுக்கப் பட்டுள்ளது. இதில் முதன்மையாகக் கருத்தில் கொள்ள வேண்டிய செய்தி என்னவெனில், இந்த கோபுரத்தில் படிக் கட்டுகளே இல்லை என்பதாகும். அதனால் ஒரு அடுக்கிலிருந்து இன்னொரு அடுக்கிற்கு ஏறவோ அல்லது இறங்கவோ முடியாது. ஒருவன் எந்த அடுக்கில் உள்ள சாதியில் பிறக் கிறானோ அதிலேயே மடிய வேண்டியதுதான். கீழ் அடுக்கில் உள்ள ஒருவர் எவ்வளவு தகுதி படைத்தவராக இருப்பினும் அவர் மேல் அடுக்கிற்குச் செல்வதற்கான வாய்ப்பே இல்லை. அதேபோல் எந்தவொரு தகுதியும் இல்லாமல் மேல் அடுக்கில் இருக்கும் ஒருவரை கீழ் அடுக்கிற்கு அனுப்புவதற்கான வழியும் இல்லை.

சாதிகளுக்கிடையிலான உறவு என்பது தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படவில்லை. மேல்சாதியில் உள்ள ஒருவர் எவ்வளவு தகுதியற்றவராக இருப்பி னும் அவருடைய சமூகத் தகுதியின் உயர்வு அப்படியே நீடிக்கும். அதேபோன்று, கீழ்ச்சாதியைச் சேர்ந்த ஒருவர் சிறந்த தகுதி பெற்றிருப்பினும் தன்னுடைய தாழ்நிலையிலிருந்து விடுபட்டு மேலே செல்லவும் முடியாது.

மேல்சாதி-கீழ்ச்சாதியினருக்கிடையே சேர்ந்து உண்ணல், கலப்பு மணம் செய்தல் ஆகியவற்றுக்குக் கடுமையான சாத்திரத் தடைகள் இருக்கின்றன. அதனால் முன்பே தனிமைப் படுத்தப்பட்ட சாதிகள் தொடர்ந்து தனித்தனியே நீடிக்கின்றன. சாதியச் சட்டங்களை மீறி சாதிகளுக்கிடையே உறவு ஏற்படு வதைத் தடுக்க தீவிரமான கண்காணிப்பு மேற்கொள்ளப் படுகிறது.

சில சாதிகள், சாதியக் கட்டமைப்புக்குள் இருந்த வாறே முன்னோக்கி இயங்குவதற்கு அனுமதிக்கப்படு கின்றன. சில சாதிகள், “தீட்டானவை” என்று முத்திரை குத்தப்பட்டு, அவற் றுக்கு முன்னோக்கி இயங்குவதற்கான வாய்ப்பு மறுக்கப்படு கிறது. இவர்கள் தீண்டப்படாத சாதியினர். இவர்களுடைய ‘தீட்டு’ எல்லாச் சாதி இந்துக்களையும் தொற்றிக் கொள்ளும் என்று எண்ணுகிறார்கள்.

சாதியப் படிநிலை அமைப்பின் உச்சியில் பார்ப்ப னர்கள் உள்ளனர். இவர்கள் தங்களைப் பூதேவர்களாகக் கருதிக் கொள்கின்றனர். மற்ற சாதிகளில் உள்ள எல்லா ஆண்களும் பெண்களும் தங்களுக்குப் பணிசெய்வதற்காகவே படைக்கப் பட்டிருப்பதாக நம்புகின்றனர். இந்துக்களின் புனித சாத்திரங்களைப் படைத் தவர்கள் பார்ப்பனர்கள் என்பதால் பிறசாதியினர் தங்களுக்கு ஏவல் செய்யக் கடமைப்பட்டவர்கள் என்கிற உரி மையைப் பெற்றிருப்பதாகப் பார்ப்பனர்கள் கருதுகின்றனர். இந்து மத சாத்திரங்களும் புராணங்களும் அறிவுக்குப் பொருந்தாத மூடநம்பிக்கைகளையே பரப்புகின்றன.

மறுபுறத்தில், போதிய சொத்துடைமையும் கல்வி உரிமையும் மறுக்கப்பட்டதால் பார்ப்பனர் அல்லாதார் பின்தங்கிய நிலையில் உள்ளனர். ஆயினும் சொத் துரிமை முழுமையாக மறுக்கப்படுவதால் ஏற்படும் கொடிய நிலை பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்படுவதில்லை. ஏனெனில் பார்ப்ப னரல்லாதார் வேளாண்மை, பொருளுற்பத்தித் தொழில்கள், வணிகம், பிற வேலை வாய்ப்புகள் மூலம் வாழ்வாதாரங்களைப் பெறுகின்றனர். சாதியப் பாகுபாட்டால் தாழ்த்தப்பட்டவர்களே கடுமை யாகப் பாதிக்கப்படுகின்றனர். இவர்கள் கொடிய வறுமை யில் உழல்கின்றனர். வலிமையற்றவர்களாக-தன்னம்பிக் கையற்றவர்களாக வாழ்கின்றனர். எனவே இவர்களின் இரங்கத்தக்க வாழ்நிலையை எடுத்துரைப்பது முதன்மையாக இருக்கிறது. இவர்கள் உய்வதற்கான ஒரே வழி, தங்களைப் பிணைத்திருக்கும் தளைகளைத் தகர்த்தெறிந்து தங்கள் உரிமைகளை மீட்டெடுப்பதே ஆகும். இதற்கான நடவடிக்கை மகிழ்ச்சியுடன் இப்போது தொடங்கப்பட்டுள்ளது.

தீண்டப்படாதவர்கள் எதிர்கொள்ளும் எண்ணற்ற சிக்கல்களை அஞ்சாமல், வெளிப்படையாக, மற்றவர் களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் எடுத்துரைப்பதற்கான அமைப்போ, செய்தி ஊடகமோ இல்லை என்பது வருந்தத் தக்க நிலையாகும். ஆயினும் சில நாளேடுகளும் பருவ இதழ்களும் தீண்டப்படாதவர்களின் சிக்கல்களைத் தீர்க்க வேண்டும் என்று எழுதுகின்றன என்பது உண்மையே! ஆனால் இவற்றில் எதுவும் தீண்டப்படாதவர்களின் உரிமைகள் குறித்து மட்டும் கவனம் செலுத்துவதில்லை. எனவே இந்த இடைவெளியை இட்டு நிரப்பும் நோக்கத்துடன் மூக்நாயக் இதழை வெளியிடுவதெனத் திட்டமிடப்பட்டு, இப்போது வெளியிடப் பட்டுள்ளது.”

இருபது ஆண்டுகள் தென்னாப்பிரிக்காவில் இருந்த காந்தியார் 1915-இல் இந்தியாவுக்குத் திரும்பினார். 1920-க்குள் இந்திய தேசியக் காங்கிரசுக் கட்சியின் ஒப்பற்ற தலை வராக உயர்ந்தார். இந்திய அளவில் பிரித்தானிய அரசுக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார். 1919-இல் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் மூலம் மக்களில் குறிப்பிட்ட பிரிவினர்களுக்கு மட்டும் வாக்குரிமை அளித்து மாகாண சட்டமன்றங்களுக்கும் மத்திய சட்டமன்றத் துக்கும் இந்தியர்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெ டுத்துக் கொள்ளும் உரிமை வழங்கப்பட்டது. இதனடிப்படை யில் 1920-இல் மாகாணங்களிலும் மத்தியிலும் சட்டமன்றங் கள் அமைந்தன. காலங்காலமாக ஆளும் வர்க்கமாக இருந்து வந்த பார்ப்பன - மேல்சாதியினர் நாட்டுக்குச் சுதந்தரம் பெறுதல் என்கிற பெயரால் பிரித்தானியரிடமிருந்து ஆட்சி

அதிகாரத்தைக் கைப்பற்றிடத் துடித்தனர். இந்தப் பின்னணி யில் மூக்நாயக்கின் மற்றொரு இதழில் தொலைநோக்குப் பார்வையுடன் அம்பேத்கர் எழுதியது கீழே தரப்பட்டுள்ளது.

"இந்தியா ஒரு சுதந்தர நாடாக மட்டும் இருந்து விட்டால் போதாது. அதில் எல்லா வகுப்பு மக்களுக்கும் மதம், சமூகம், பொருளாதாரம், அரசியல் தொடர்பான வற்றில் சமஉரிமை என்பது உறுதி செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனுக்கும் வாழ்வின் படிகளில் உயர்வதற்கான வாய்ப்பும், இவ்வாறு முன்னேறுவதற்கு ஏற்ற நல்ல சூழ் நிலையும் அளிக்கப்பட வேண்டும். பிரித்தானிய அரசின் அநீதி யான அதிகாரத்தை எதிர்ப்பது சரி என்று பார்ப்பனர்கள் சொல்வதில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறதோ, அதை விட நூறு மடங்கு அளவு நியாயம்-ஆட்சி அதிகாரம் ஆங்கி லேயரிடமிருந்து பார்ப்பனர் கைகளுக்கு மாற்றப்படக் கூடாது என்று ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் எதிர்ப்பதில் அடங்கி யிருக்கிறது."

பெரியாரும் அம்பேத்கரும் சுதந்தர இந்தியாவில் ஆட்சி அதிகாரம் என்பது வரலாறு நெடுகிலும் ஆளும் வகுப்பாக இருந்து வந்த பார்ப்பனர் - சத்திரியர் - பனியா ஆகியோரிடம் செல்லக் கூடாது என்று கருதினர். ஆனால் இதை இவர்களால் தடுக்க இயலாது போயிற்று என்பது ஒரு வரலாற்று அவல மாகும். பெரியாரால் 1947 ஆகத்து 15 சுதந்தர நாளைத் துக்க நாள் என்று மட்டுமே அறிவிக்க முடிந்தது. வாழ்நாள் முழுவதும் சுதந்தரத் தமிழ்நாடு வேண்டும் என்று முழங்கி னார். பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பி னருக்கு அரசியலிலும் அரசு வேலையிலும்தான் பெற்றுத் தந்த இடஒதுக்கீட்டு உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் தலைவர் பொறுப்பை ஏற்றதாக அரசமைப்புச் சட்ட அவையிலேயே 25.11.1949-இல் அறிவித்த அம்பேத்கர், 2.9.1953 அன்று மாநிலங்கள் அவையில், "இந்த அரசமைப்புச் சட்டம் யாருக்கும் பயன் தராது. இதை எரிப்பதற்கு முதல் ஆளாக இருப்பேன்" என்று அறிவித்தார்.

**1920 சனவரி 31 அன்று தொடங்கப்பட்ட மூக் நாயக் இதழ் 1924 ஏப்பிரல் வரை வெளிவந்தது. அதன் பின் அம்பேத்கர் 3-4-1927 அன்று 'பகிஷ்கிரித் பாரத்' (புறக்கணிக்கப்பட்ட இந்தியா) என்கிற ஏட்டைத் தொடங் கினார். இதுவும் 15-11-1929-இல் நின்று போனது. அடுத்த 24-11-1930-இல் 'ஜனதா' (மக்கள்) ஏட்டைத் தொடங்கினார். இதுவும் நின்று போனபின் 'சமதா' (சமத்துவம்) எனும் இதழை அம்பேத்கர் நடத்தினார்.**

பெரியார் 'குடிஅரசு' ஏட்டை 2-5-1925 அன்று தொடங் கினார். அதற்கு அய்ந்தாண்டுகளுக்கு முன்பே அம்பேத்கர் மூக் நாயக் இதழைத் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இந்துமதச் சாத்திரங்களின்படி, இரு பிறப்பினர் களான பார்ப்பனர்களும் மேல்சாதியினரும் மட்டுமே கல்வி கற்க உரிமை படைத்தவர்களாக இருந்தனர். சூத்திரர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் கல்வி உரிமை மறுக்கப்பட்டிருந்ததுடன், கல்வி கற்க முயன்றால் கடுமையான தண்டனைகளும் விதிக்கப்பட்டன. எனவே ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கல்வி வாய்ப்புகளைப் பார்ப்பனர்களே பெருமளவில் கைப்பற்றி னார். அதனால் நாளேடுகள், பருவ இதழ்கள் ஆகிய வற்றில் இவர்களின் ஆதிக்கமே கோலோச்சியது. தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் கடந்த நாற்பது ஆண்டு களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஊடகத் துறையில் பார்ப் பனர் ஆதிக்கத்தையும் பெருமளவில் தகர்த்துள்ளனர். ஆயினும் இன்னும் பட்டியல் இனத்தவர் இத்துறையில் நுழைய முடியவில்லை.

சுதந்தரம் பெற்று எழுபது ஆண்டுகளுக்குப் பின்னும் அச்சு ஊடகங்களும் காட்சி ஊடகங்களும் பெருமுத லாளிகளுக்குச் சொந்தமானவைகளாகவே இருக்கின்றன. அதனால் பொதுவாக இவை ஆளும் கட்சிகளுக்கு ஆதரவாகவே செயல்படுகின்றன. சில சமயங்களில் மென்மையாகக் கண்டிக்கும் போக்கைக் கடைப்பிடிக்கின்றன. 2014-இல் நரேந்திர மோடி தலைமை அமைச் சராகப் பொறுப்பேற்ற பின்னர், அரசைக் கண்டிக்கும் ஊடகங்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன.

மக்களின் சிந்தனைப்போக்கைக் கட்டமைப்பதில் ஆளும் வர்க்கம் செலுத்தும் ஆதிக்கம் குறித்து காரல் மார்க்சு இவ் வாறு கூறுகிறார்: "ஆளும் வர்க்கத்தின் கருத்துகளே ஒவ் வொரு சகாப்தத்திலும் ஆளும் கருத்துக்களாக இருக்கின்றன. அதாவது, சமுதாயத்தில் பொருள் வகையில் எந்த வர்க்கம் ஆளும் சக்தியாக உள்ளதோ, அதே வர்க்கம்தான் அதே சமயம் அறிவாற்றல் துறையில் ஆளும் சக்தியாகவும் விளங்குகிறது. பொருள் வகை உற்பத்திச் சாதனங்களைத் தன் கைவசம் வைத்திருக்கும் வர்க்கமே, அக்காரணத்தாலேயே, பொது வாகச் சொல்லப்போனால் சிந்தனைப் படைப்புச் சாதனங் களையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறது. இதனால் சிந்தனைப் படைப்புச் சாதனங்கள் இல்லாதவர்களின் கருத்து கள் ஆளும் வர்க்கத்திற்குக் கட்டுப்பட்ட வையாகின்றன. ஆளும் கருத்துகள் என்பன உண்மையில் ஆதிக்கம் செலுத்தும் பொருள் வகை உறவுகளின் கருத்து வெளிப்பாடேயன்றி வேறல்ல" ('செருமானியச் சித்தாந்தம்' - நூல்).

**ஆயினும் சிற்றுளி பெரும்பாறையை உடைப்பது போல், அம்பேத்கர் தொடங்கிய 'மூக்நாயக்' பெரியார் தொடங்கிய 'குடிஅரசு' போன்ற ஏடுகள் ஆளும் வர்க் கத்தின் ஆதிக்கத்தைத் தகர்ப்பதிலும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திலும் குறிப்பிடத்தக்க பங்காற்றி உள்ளன. இத்தகைய புரட்சிகரமான சிற் றேடுகள் இப்போதும் வெளிவருகின்றன. இவற்றை மக்களிடம் பரப்புவதும், மக்களை அணிதிரட்டித் தொடர்ந்து போராடுவதும் ஆளும் வர்க்கத்தின் ஆதிக்கத்தை வீழ்த்துவதற்கான வழி என்பதை 'மூக்நாயக்'கின் நூற் றாண்டு நமக்கு உணர்த்துகிறது.** ●

# இதுதான் இன்றைக்கு இனிப்பான செய்தி

உங்கள் சட்டைக் காலரில் உள்ள அழுக்கு எந்த சோப்பைக் கொண்டு தேய்த்தாலும் போக மறுக்கிறதா? கவலைப்படாமல் கொஞ்சம் சீனியை எடுத்து தேய்த்துப் பாருங்கள். நிச்சயமாகப் போகும். ஆக, சட்டை அழுக்கைப் போக்கும் ஒரு வேதிப் பொருளைத் தான் நாம் அள்ளி அள்ளித் தின்று கொண்டிருக்கிறோம். இந்த சீனியைச் சாப்பிட்டால் நம் குடல் என்ன பாடுபடும்?

இனிப்பை விரும்பி சாப்பிடாதவர்கள் யார் தான் இருக்க முடியும்? காலையில் எழுந்தவுடன் குடிக்கும் காப்பியிருந்து இரவு படுக்கச் செல்லும் முன் குடிக்கும் பால் வரை சீனி ஒரு ஊடுபொருளாக நமக்குள் செல் கிறது. சீனியை அப்படியே அள்ளியும் சாப்பிடுகிறோம்.

இந்த வெள்ளைச் சீனியை எப்படித் தயார் செய் கிறார்கள் என்கிற விபரத்தை நீங்கள் தெரிந்து கொண்டீர்களானால் இனி அதைத் தொடக்கூட மாட்டீர்கள்.

குறிப்பாக, வெள்ளைச் சீனியைத் தயார் செய்ய என்னென்ன ரசயானப் பொருள்கள் பயன்படுத்தப்படு கின்றன என்று பாப்போம்.

1. கரும்பிலிருந்து சாறு பிழியப்படும் நிலையில் பிளிச்சிங் பவுடர் அல்லது குளோரின் எனப்படும் கெமிக்கலைக் புளுயுடு பாக்டீரியா கண்ட்ரோலாக பயன்படுத்துகிறார்கள்.
2. பிழிந்த சாறுடன் பாஸ்போரிக் ஆசிட் லிட்டருக்கு 200 மில்லி வீதம் கலந்து 60 சென்டிகிரேட் முதல் 70 சென்டிகிரெட் சூடுபடுத்தப்படுகிறது. இங்கு இந்த ஆசிட் அழுக்கு நீக்கியாகப் பயன்படுத்தப்படுகிறது.
3. இதன் பிறகு சுண்ணாம்பை 0.2 சதவிகிதம் என்கிற அளவில் சேர்த்து சல்பர்-டை-ஆக்சைடு வாயு செலுத்துகிறார்கள்.
4. $102^{\circ}$ சென்டிகிரேட் கொதிகலனில் சூடுபடுத்தி நல்ல விட்டமின்களை இழந்து, செயற்கைச் சுண் ணாம்புச் சத்து அளவுக்கு அதிகமாக சேர்ந்து விடுகிறது.
5. அடுத்து, பாலி எலக்ட்ரோலைட்டைச் சேர்த்து தெளிகலனில் மண், சக்கை போன்ற பொருள் களாகப் பிரித்து எடுக்கப்பட்டு தெளிந்த சாறு கிடைக்கிறது.
6. சுடுகலனில் காஸ்டிக் சோடா, வாஷிங் சோடா சேர்த்து அடர்த்தி மிகுந்த ஜூஸ் தயாரிக்கப்படுகிறது.
7. மறுபடியும் சல்பர் டை ஆக்சைடும் சோடியம் ஹைட்ரோ சல்பேட்டும் சேர்க்க படிக நிலைக்கு சீனியாக வருகிறது. சல்பர் டை ஆக்சைடு நஞ்சு சீனியில் கலந்துவிடுகிறது.
8. இப்படித் தயாரான சீனியில் எஞ்சி நிற்பது வெறும் கார்பன் என்னும் கரியே.

சீனியைத் தயாரான நாளிலிருந்து ஆறு மாத காலத்திற்குமேல் சாப்பிடக்கூடாது. காரணம், அதில் உள்ள சல்பர்டை ஆக்சைடு என்னும் ரசாயனம் மஞ்சள் நிறமாக மாறி வீரியுமுள்ள நஞ்சாக மாறிவிடுகிறது.

குடலில் மட்டுமல்ல, பல் வலி, பல் சொத்தை, குடல்புண், சளித்தொல்லை, உடல்பருமன், இதய நோய் மற்றும் நீரிழிவு நோய், இரத்த அழுத்தம் போன்ற பெரிய நோய்கள் அனைத்துக்கும் இதுதான் முதன்மையான காரணியாக அமைகின்றது.

எனவே ஆலைகளில் தயாரான வெள்ளைச் சீனி சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, வெல்லம், பனங்கட்டி, நாட்டுச் சர்க்கரைகளை எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம். இதனால் உங்களுக்கு ரத்த அழுத்தமோ, இதய நோயோ, சர்க்கரை நோயோ வராது.

- பெரியசாமி

## உலகத் தாய்மொழி நாள் பிப்ரவரி 21




1938 இந்தி எதிர்ப்புப் போராட்டம் 1940 பிப்ரவரி 21 வெற்றி பெற்ற நாள். தமிழ் உரிமைக் கூட்டமைப்பு காஞ்சியில் சுடரேற்றி மொழிப்போர் ஈகியருக்கு புகழ் வணக்க நிகழ்வை நடத்தியது. அமைப்பின் செயலாளர் காஞ்சி அமுதன் தலைமை ஏற்க ஈகியர் சுடரை தோழர் ரேவதி ஏற்றினார். ஈகியர்களை நினைவு கூர்ந்து தமிழ் வளர்ச்சித் துறை மேனாள் இயக்குனர் கூ.வ.எழிலரசு. ஐந்திணை கலை பண்பாட்டு இயக்கத்தின் கவிஞர் அமுதகீதன் பாடகர் உலக ஒளி, மா.பெ.பொ.க. சம்பந்த சிவக்குமார். மதிமுக மகேசு, சரவணன். தன்னாட்சித் தமிழகம் பெ.பழநி. திராவிடர் விடுதலைக் கழகம் ரவி பாரதி, ஆ.மோகன் பாலாற்றுப் பாதுகாப்புக் கூட்டியக்கம் உள்ளிட்டோர் உரையாற்றினர். சேகர் மாலை தொடுத் துக் கொடுத்தார். சந்தோசம் நன்றி கூற நிகழ்வு எழுச்சியாக நடைபெற்றது.

# உலகத் தாய்மொழி நாள் பேரணி நிகழ்ச்சிகள்
## தி.பி.2051 கும்பம் 09 (கி.பி.2020 பிப்பிரவரி 21)

தமிழ்நாட்டுக்கல்வி இயக்கம் சென்னையில் நடத்திய உலக-தாய்மொழிநாள் பேரணி ஆனது மாணாக்கர்கள்-ஆசிரியர்கள்-பெற்றோர்கள் பங்கேற்புடன் மிக எழுச்சியோடு நடைபெற்றது. கல்வி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு.பொழிலன் பேரணிக்குத் தலையேற்க, செய்தித் தொடர்பாளர் திருமலை தமிழரசன், சென்னை மாவட்ட ஒருங் கிணைப்பாளர் செல்வக்குமார் உள்ளிட்டோர் பேரணிக் கான முன்னேற்பாடுகளைச் செய்தனர். செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் இயக்குநர் தங்க.காமராசு அவர்கள் தொடங்கி வைத்த பேரணியை, பேராசியர் கருணானந்தம், முனைவர் மா.பூங்குன்றன் ஆகியோர் நிறைவு செய்து வைத்தனர்.




கருமலை (கிருட்டிணகிரி) மாவட்டத்தில் தமிழ் நாட்டுக் கல்வி இயக்கத்தின் இணை ஒருங்கிணைப் பாளர் ஒப்புரவாளன் தலைமையில், உலக-தாய்மொழி நாள்விழாவானது இராயக்கோட்டை அருகிலுள்ள இரா.நொரப்புக்குட்டை, ஒடையாண்ட அள்ளி, ஏரி சின்ன கவுண்டன அள்ளி ஆகிய ஊர்களின் பள்ளிகளில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆசிரியர் சோசப்ராபின் உறுதுணையாக இருந்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் மணலூர்ப்பேட்டையில் உலகத் தாய்மொழி நாள்(21.02.2020), தமிழ்நாட்டு கல்வி இயக்கத்தின் மண்டல ஒருங்கிணைப்பாளர் திரு.ஆற்றல் எனும் சக்தி, அனைவரையும் ஒருங் கிணைத்தார். மாணவர்கள் ஊக்கத்தோடும் உணர் வோடும் பங்குபெற்றனர். புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் "உலக-தாய்மொழி நாள் விழா! கருத்தரங்கத்தை (21.02.2020) வெள்ளிக்கிழமை, தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் சிறப்பாக நடத்தியது. ஆசிரியர் சி.சசிக்குமார் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்து, கருத்துரையாற்றினார். தமிழ்நாட்டுக்கல்வி இயக்கத் தின் கொள்கைப் பரப்புநரும் மாணவருமாகிய தமிழ்ச் சமரன் (தருமசாசுத்தா), எழுச்சியுரையாற்றினார்.

தெற்குமண்டல ஒருங்கிணைப்பாளர் திரு.கர்ணன் தலைமையில், சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி யில், (20.02.2020) வியாழக்கிழமையன்று தெரு முனைக் கூட்டமும், அடுநாள் (21.02.2020) காலை யில், பள்ளிக்கூடத்தில் தாய்மொழி நாள் விழாகருத் தரங்கமும் நடத்தப்பட்டது. மேலும், அன்றைய நாளின் மாலையில், சிவகங்கை நகரத்தில் பொதுக் கூட்டமும் நடத்தப்பட்டது. புதுக்கோட்டை இரா.பாவாணன் அவர்கள், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தோழர் குணசேகரன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர். மதுரை மாவட்டம் சோளங்குருணியில் தமிழ்நாட்டுக் கல்வி இயக்கத்தின் கொள்கைப் பரப்புநர் ஆசிரியர் துளிர் அவர்களின் முன்முயற்சியில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்புடன் பேரணி மற்றும் உரை அரங்கம் நடைபெற்றது. பேரணியில், தமிழே கல்விமொழி! தமிழ் நாட்டிற்கே கல்வி உரிமை! தமிழ் வழி படித்தோருக்கே வேலை! எனும் முழக்கங்கள் ஓங்கி எழுப்பப்பட்டன. அதனைத் தொடர்ந்து நடை பெற்ற உரைஅரங்கத்தில் தமிழக மக்கள் பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் தோழர் மீ.தா.பாண்டியன் அவர்கள் சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்வுக்கு பள்ளியின் வரலாற்று ஆசிரியர் திருமதி. ஸ்டெல்லா தலைமை தாங்கினார். ஆசிரியர்கள் விஜயலட்சுமி, தனலட்சுமி, முத்தரசி, கவிதா பானு மற்றும் வினோத் குமார் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

பாவலரேறு தமிழ்க்களத்தில் நடைபெற்ற தாய்மொழி நாள் விழாவுக்கு, தமிழ்நாட்டுக் கல்வி இயக்கத்தின் நெறியாளர் திரு. கி.குணத்தொகை தலைமையேற்க, மாணவர்களம் திரு.மா.பிறை நுதல் வரவேற்புரை யாற்றினார். சிறப் பழைப்பாளர்களாக, காயிதேமில்லத் கல்லூரி முதல்வர் முனைவர் முகமது செரிப் அவர் களும் தமிழ்த்துறைப் பேராசிரியர் இன்குலாப் அவர் களும், தலைமையாசிரியர் இறை.பொற்கொடி அவர் களும், தலைமையாசிரியர் தமிழ்க்கண்மணி அவர் களும் கலந்து கொண்டனர். திருவாரூரில், மாணவர் கள் தாய்மொழி நாள் உறுதிமொழி எடுத்துக்கொண் டனர். கல்வி இயக்கத்தின் தலைமைப் பொறுப்பாளர் பாவலர் த.ரெ.தமிழ்மணி அவர்களும் பாவலர் இரா.கார்த்திக் அவர்களும் கருத்துரையாற்றினர்.

# பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு

## கோவையில் பேரெழுச்சியோடு நடத்திய

# நீலச்சட்டைப் பேரணி - சாதி ஒழிப்பு மாநாடு

பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பில் (09-02-2020) ஞாயிறு அன்று, கோவையில் நடத்தப்பட்ட நீலச்சட்டைப் பேரணியிலும் மாநாட்டிலும் தமிழகமெங்கும் உள்ள ஆதரவாளர்களும், பொதுமக்களும், கூட்டமைப்பின் உறுப்பு அமைப்பினரும் வந்து பெருந்திரளாய் ஊக்கத்தோடு பங்குபெற்ற நிகழ்ச்சி பேரெழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறது; இது ஆக்கவழிப்பட்ட விவாதத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்தமாநாடு தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் முகாமைத்துவம் (முக்கியத்துவம்) பெறுகிறது; ஒருங்கிணைப்புக்கான புதிய பாதைக்கு நம்பிக்கையை ஊட்டியிருக்கிறது. தி.வி.க. தலைவர் தோழர் குளத்தூர் தா.செ .மணி பேரணிக்குத் தலைமையேற்க, ஆதித்தமிழர் பேரவையின் தலைவர் இரா.அதியமான் பேரணியைத் தொடங்கி வைத்தார். பறையிசை முழக்கங்களோடு எழுச்சியாகத் தொடங்கிய பேரணியானது கோவை பாலசுந்தரம் சாலையே இடம் கொள்ளாத அளவிற்கு நீண்டிருந்தது; நீலக்கடலாய்க் காட்சியளித்தது. பேரணியைப் போலவே மாநாடும், நிமிர்வு, நிகர் ஆகிய கலைக் குழுக்களின் எழுச்சியான பறையிசை முழக்கத்தோடு தொடங்கியது. இந்நிகழ்வில் புரட்சியாளர் அம்பேத்கர், தந்தைபெரியார், காரல்மார்க்சு, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன், புலே உள்ளிட்ட பல தலைவர்கள் குறித்து எழுச்சியான பாடல்கள் பாடப்பட்டன. மாநாட்டுத் தொடக்கத்தில் விடுதலைத் தமிழ்ப்புலிகள் கட்சியின் கட்சியின் தலைவர் குடந்தை அரசன் வரவேற்புரை யாற்றினார். கருத்துரை அமர்வில், தமிழக ஒடுக்கப் பட்டோர் விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலர் நிலவழகன் உரையாற்றினார்.

அடுத்ததாக, நீரோடை அமைப்பின் தலைவர் நிலவன், ஆதித்தமிழர் கட்சியின் தலைவர் கு.ஜக்கையன், தியாகி இமானுவேல் பேரவையின் தலைவர் பூ.சந்திரபோசு, தமிழக மக்கள் சனநாயகக் கட்சியின் தலைவர் செரீப் ஆகியோர் கருத்துரையாற்றினார். மாநாட்டுக்குத் தலைமையேற்ற தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் உரையாற்றினார். தமிழர் விடுதலைக்கழக செள.சுந்தரமூர்த்தி சிறப்புச் செய்தார். அடுத்ததாக, பார்ப்பனியம்.. சாதியம்.. வேரறு! எனும் நூலினைக் கூட்டமைப்பின் சார்பாக, மா.பெ.பொ.க. வாலாசா வல்லவன் வெளியிட, தமிழர் விடியல் கட்சி டைசன், திராவிடத் தமிழர் கட்சித் தலைவர் சி.வெண் மணி உள்ளிட்ட தலைவர்கள் நூலைப் பெற்றுக்




கொண்டார்கள். சிறப்புரை அமர்வு: அடுத்ததாக, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தி.வேல்முருகன் சிறப்புரை யாற்றினார். இவருக்கு இரா.அதியமான் அவர்கள் சிறப்புச் செய்தார். சிறப்புரையாற்றிய மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேரா.ஜவாகிருல்லாவுக்குத் மே 17இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி சிறப்புச் செய்தார். மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் வே.ஆனைமுத்து தன் 95 ஆம் அகவையிலும் ஊக்கத்தோடு, வெள்ளம் போல் தமிழர் கூட்டம். என்று உரக்கச் சொல்லிப் பேசத் தொடங்கினார். அவருக்குத் தோழர் ஓவியா சிறப்புச் செய்தார். அடுத்துப் பேசிய காஞ்சி மக்கள் மன்றம் மகேசுக்கு, நாகை திருவள்ளுவன் சிறப்புச் செய்தார். நோக்கவுரையாற்றிய பொழிலன், தமிழக மக்கள் முன்னணி ஒருங்கிணைப்பாளர் பெரியாரிய உணர் வாளர்கள் கூட்டமைப்பு வரலாற்றுத் தேவை குறித்தும் நோக்கங்கள் குறித்தும் தெளிவாக எடுத்துரைத்தார். அவருக்கு, மக்கள் அதிகாரம் அமைப்பின் சூர்யா, சிறப்புச் செய்தார். சிறப்புரையாற்றிய வழக்குரைஞர் கயல் (அங்கயற்கண்ணி) தோழருக்கு, மக்கள் விடுதலைமுன்னணியின் மாரிமுத்துவும் தொடக்க உரையாற்றிய தமிழ்ப் புலிகள் கட்சியின் தலைவர் நாகை திருவள்ளுவனுக்கு தமிழ்வழிக்கல்வி இயக்க சின்னப்பத் தமிழரும் சிறப்புச் செய்தனர். தீர்மானங்களை முன்மொழிந்து பேசிய மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் காந்திக்கு, தமிழ்நாடு சாக்கிய அருந்ததியர் சங்கத்தின் பொறுப் பாளரான மதிவண்ணன் சிறப்புச் செய்தார்.

அடுத்து, போராட்ட அறிவிப்புத் தீர்மானம் முன் மொழியப்பட்டதைப் பல்லாயிரக்கணக்கில் அமர்ந்

திருந்த பார்வையாளர்கள் அனைவரும் எழுந்து நின்று கைத்தட்டி வரவேற்று முழக்கமிட்டனர்.

மாநாட்டு மேடையிலேயே திராவிடர் கழகத்தின் வீரமணி அவர்கள் இரு சாதி மறுப்புத் திருமணங்களை நடத்தி வைத்தார். முதலாவதாக, திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் கழகத் தோழர் தபசிக் குமரனின் மகளுக்கும் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் ஈசுவரனின் மகனுக்கும் இரண்டாவதாக, நடைபெற விருக்கும் திருமண இணையர்களும் அவர் அமைப் பின் உறுப்பினர்கள் தாம். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ரம்யாவுக்கும் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பிரகாசுக்கும் திருமணத்தை நடத்திவைத்துப் பேசு கையில், சாதி ஒழிப்பு மாநாட்டில் சாதிமறுப்புத் திருமணங்கள் நடைபெற்றிருப்பது சிறப்புக்குரியது; சிக்கனமான திருமணம் இது என்று சொல்லி, இணையர்களைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தார். இதன் தொடர்ச்சியாகச் சிறப்புரையாற்றிய கி.வீரமணிச் திராவிடத் தமிழர் கட்சி சி.வெண்மணி சிறப்புச் செய்தார்.

சமூகநீதி வழக்கறிஞர்கள் சங்கத்தினர் மாநாட்டிற் கான நன்கொடையாக 25,000 உருவாய் வழங்கினர். அடுத்ததாக உரையாற்றிய இந்திய-சமூக சனநாயகக் கட்சி (எசு.டீ.பி.ஐ) அமைப்பின் தமிழகத் தலைவர் தோழர் தெகலான் பாகவி அவர்களுக்கு, தமிழக மக்கள் முன்னணியின் தோழர் வழக்குரைஞர் பாவேந்தனும் ஓவியாவுக்கு, வழக்குரைஞர் பாலமுருகனும் சிறப்புச் செய்தனர். அடுத்து, தமிழ்த்தேச மக்கள் முன்னணி மீ.த.பாண்டியன் அவர்களுக்கு, பு.இ.மு. மலரவன் சிறப்புச் செய்தார்.

அடுத்துப் பேசிய திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் குளத்தூர் தா.செ.மணி அவர்களுக்கு, வெல்பேர் பார்ட்டி ஆப்இந்தியா’ கட்சியின் அப்துல் ரகுமானும், சொல்லாய்வு அறிஞர் அருளியாருக்குத் தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சியின் தோழர் செல்வமணியம், தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேர வையின் தலைவர் உ.தனியரசுக்கு, செங்கோட்டை யனும் ஆதித்தமிழர் பேரவையின் தலைவர் இரா.அதிய மானுக்குத் தமிழர் விடியல் கட்சி மா.டைசனும் சிறப்புச் செய்தனர்.

சிறப்புரை அமர்வில் நிறைவுரை ஆற்றிய வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் அவர்களுக்கு, தந்தை பெரியார் திராவிடர் கழக வெ. ஆறுச்சாமி சிறப்புச் செய்தார். அத்துடன், தோழர் ஆறுச்சாமி நன்றியுரை யாற்றினார்.

வரலாற்றுச் சிறப்புக்குரிய இந்நிகழ்விற்கான உழைப்பில் பங்கு பெற்றோர்க்கும், திராளக வந்திருந்து பேரணியிலும் மாநாட்டிலும்பங்குபெற்றோர்க்கும் உளமார்ந்த பாராட்டுகளையும் நன்றியையும் தெரி வித்துக் கொள்வோம்.

- செய்தி : **ஒப்புரவாளன்**

## இம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்களில் சில

**கொள்கைத் தீர்மானங்கள் :**

★ சாதிவெறி மதவெறியைத் தூண்டி மக்களிடையே ஒரு பக்கம் பகை உணர்வுகளை உருவாக்கிக் கொண்டி ருப்பதோடு ஒரே மக்கள், ஒரே சட்டம், ஒற்றைப் பண்பாடு, ஒற்றை அடையாளம் என்கிற வகையில் பார்ப்பனிய அதிகார வெறி கொண்டு இயங்குகிற இந்திய அரசு, இந்தியாவிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறு மொழித் தேசங்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் அடையாளங்களையும் மறுக்கிறது. தமிழ் ஈழ ஏதிலியர் களுக்குக் குடியுரிமை வழங்க மறுப்பதோடு, மதச் சிறுபான்மை மக்களுக்கும் குடியுரிமை வழங்க மறுத்து இரண்டாம் தரக் குடிமக்களாக மாற்றுகிற முயற்சி செய்கிற நோக்கில் உள்ள இந்திய அரசை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. இந்நிலையில் மக்கள் தங்கள் இன அடையாள உரிமைகளையும், மொழித் தேச அளவில் தங்களைத் தமிழர்கள் என்றே பதிந்து கொள்ளவும், தமிழக மக்களைக் குடியுரிமையோடு இங்கு வாழ வைக்கவும், மதச் சிறுபான்மை யினருக்கு எவ்வகை இடர்களும் ஏற்படாத வகையில் குடியுரிமை வழங்கவும் இம் மாநாடு வலியுறுத்துகிறது..

★ தமிழகத்தில், சாதி ஆணவப் படுகொலைகள் ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகிக் கொண்டே வருகின்றன. சாதி ஆணவப் படுகொலைகளைத் தடுப்பதற்குச் சிறப்புச் சட்டம் இயற்ற வேண்டும் என உச்சநீதிமன்றமே வலியுறுத்தி உள்ளது. தவிரவும் இந்தியச் சட்ட ஆணையம் மற்றும் இந்திய மகளிர் ஆணையம் ஆகியவையும் சாதி ஆணவப் படுகொலைக்கு எதிராகத் தனிச்சட்டம் இயற்ற வேண்டும் எனப் பரிந்துரைத் துள்ளன.இந்நிலையில் சாதித ஆணவப் படுகொலை கள் குறித்து இதுவரையில் தமிழகஅரசு ஏதும் கருத்தறி விக்காமல் இருப்பது சரியன்று. எனவே, இவற்றைக் கருத்தில் கொண்டும், நடப்பு நிலையைக் கருத்தில் கொண்டும் சாதி ஆணவப் படுகொலையைத் தடுக்கச் சிறப்புச் சட்டம் இயற்ற வேண்டும் என்றும், சாதி மறுப்புத் திருமணங்களை ஊக்கப்படுத்தவும், சாதி மறுப்புத் திருமணங்களை நடத்திவைக்கவும், சாதி மறுப்புத் தம்பதிகளுக்குச் சட்ட, சமூகப்பாதுகாப்பு வழங்கவும் அவர்களின் வாரிசுகளைச் சாதியற்றவர் களாகப் பதிவுசெய்து அவர்களுக்குச் சிறப்புரிமை வழங்கவும் சாதிமறுப்புத் திருமணப் பாதுகாப்பு ஆணையம் என்கிற பெயரில், ஒரு தனி ஆணையம் அமைத்திட வேண்டும் எனவும் தமிழ்நாடு மற்றும் இந்திய அரசுகளை இம் மாநாடு வலியுறுத்துகிறது.

★ சாதி ஆணவப் படுகொலைகள் நடந்தால், அதற்கு மாவட்ட ஆட்சியரும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரும் பொறுப்பு ஏற்க வேண்டும் என

நீதிமன்றங்கள் வலியுறுத்தி உள்ளன. எனவே சாதி ஆணவப் படுகொலைகள் அதிகமாக நடக்கும் மாவட்டங்களில் அம் மாவட்ட ஆட்சியரும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் மீது தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம் மாநாடு கோருகிறது.

★ சாதி,மத மறுப்புத் திருமணம் செய்யும் இணையருக்குக் குறிப்பிட்ட காலம்வரை பாதுகாப்பு வழங்கப் பாதுகாப்பு இல்லங்களைப் பஞ்சாப் அரசு நிறுவி உள்ளது. அதைப் போன்ற பாதுகாப்பு இல்லங்களைத் தமிழக அரசு உருவாக்க வேண்டும் என இம்மாநாடு பரிந்துரைக்கிறது.

★ சாதி,மத மறுப்புத் திருமணம் செய்துகொண்ட இணையர்களை நாட்டின் சிறந்த குடிமக்களாக அறிவிக்க வேண்டும். மேலும் வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர், காவல் உயரதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர் பங்கேற்கும் அரசு விழாக்களில் அவர்களைப் பாராட்டிச் சிறப்பிக்க அரசு கொள்கை முடிவு எடுக்க வேண்டும் என்றும், சாதிமறுப்புத் திருமணங்களை ஊக்கப்படுத்தவும், நெருங்கிய இரத்த உறவுத் திருமணங்கள் செய்வதைத் தவிர்க்கப் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும் என்றும், குறிப்பாக நெருங்கிய இரத்த உறவுத் திருமணங்கள் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்படும் மூளை மற்றும் உடலியல் குறைபாடுகள் குறித்து பொது மக்களுக்கு அறிவியல் அடிப்படையிலான விழிப்புணர்வை ஏற்படுத்த அரசு விளம்பரம் செய்ய வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

★ சாதி மறுப்புத் திருமண இணையருக்கு இராசத்தான் அரசு ரூ.5 இலட்சம் உதவித் தொகை வழங்குகிறது. பல மாநிலங்கள் குறைந்தது ஒரு இலட்சம் ரூபாய்வரை உதவித்தொகை வழங்குகின்றன. ஆனால் இந்தியாவிலேயே மிகக் குறைந்த உதவித் தொகையைத்தான் தமிழக அரசு வழங்கி வருகிறது. அதிலும் பட்டம் பெற்ற பெண்களுக்கு அதிக உதவித் தொகையும், பட்டம் பெறாத பெண்களுக்குக் குறைவான உதவித்தொகையும் வழங்குகிறது. எனவே இந்தப் பாகுபாட்டைக் களைந்து, சாதிமறுப்பு இணையருக்கு இராசத்தான் அரசு வழங்குவதுபோல் ஐந்து இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்க வேண்டும் என இம்மாநாடு வேண்டுகிறது.

★ சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட இணையரின் குழந்தைகளுக்கு மருத்துவம். மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சிறப்பு இடங்களைத் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. ஆனால் 69 விழுக்காட்டிற்குமேல் இந்த இட ஒதுக்கீடு வருவதால், அதை வழங்கக் கூடாது என சென்னை உயர் நீதி மன்றம் தீர்ப்பு அளித்தது. இதை எதிர்த்துத் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. ஆனால் அந்த வழக்கு நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. சாதிமறுப்புத் திருமண இணையரின் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த சலுகையைப் பறிக்கும் இந்த வழக்கை உச்ச நீதிமன்றத்தில் விரைவுபடுத்தி நீதியை மீட்டுத்தருமாறு இம் மாநாடு தமிழக அரசைக் கோருகிறது.

★ கல்வி நிலையங்களில் சாதியை வெளிப்படுத்தும்படி வண்ணக் கயிறுகளை அக் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் கட்டி வரக் கூடாது என்ற தெளிவான ஆணையை வெளியிட வேண்டும் என இம் மாநாடு தமிழக அரசைக் கோருகிறது.

**போராட்ட அறிவிப்புத் தீர்மானம்:**

★ சாதி ஆணவ வெறிகளுக்கு அடித்தளமாகவும், பார்ப்பனியக் கருத்தாக்கங்களின் தொகுப்பாகவும் மொத்த வெளிப்பாடாகவுமே மனுதர்மம் எனும் பார்ப்பனிய, சாதிவெறி பிடித்த நூல் உள்ளது என்பதைத் தமிழ் அறிஞர்கள் பலரும், தந்தைபெரியார் அவர்களும், அண்ணல் அம்பேத்கர் அவர்களும் அடையாளப்படுத்தியும், அதை மறுத்த செயல்பாடுகளை முன்னெடுத்தும் இருக்கின்றனர். அம்பேத்கரும், பெரியாரும் அக் கருத்துக்கும், செயற்பாடுகளுக்கும் முன்னோட்டமாக மனுதர்மத்தைத் தீயிட்டுக் கொளுத்தியும் இருக்கின்றனர்.. அவர்களின் வழிகாட்டலில் வெறிபிடித்த பார்ப்பனிய சாதிய ஆணவ நூலான மனுநுலை எதிர்வரும் மே 20-ஆம் நாள் அதாவது அயோத்திதாசப் பண்டிதர் பிறந்தநாளில் தமிழகமெங்கும் தீயிட்டுக் கொளுத்தும் போராட்டத்தை முன்னெடுப்பது எனப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு, சாதி ஒழிப்பு மாநாட்டின்வழி அறிவிக்கிறது. ●

## க.வெள்ளையன் மறைவு



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர் காஞ்சி ஆதிகேசவன் துணைவியார் ஆ.ஈஸ்வரியின் சிறிய தகப்பனாரும், தமிழ்நாடு தையல் கலைஞர்கள் முன்னேற்றச் சங்கத்தின் காஞ்சி மேற்கு மாவட்டத் துணைத் தலைவராக இருந்து செயல்பட்டவருமான பிள்ளையார்பாளையம், எண்.1/7 கிருஷ்ணன் தெருவில் வசித்த க.வெள்ளையன் அவர்கள் தம் 68ஆம் அகவையில் 21.2.2020 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் இயற்கை எய்தினார். அன்னாரை இழந்து துயருறும் அவர்தம் துணைவியார், மகன் ரமேஷ், மகள் ரேவதி மற்றும் சுற்றத்தார் அனைவருக்கும் மா.பெ.பொ.க. ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

***With best compliments from***

***Om Sairam***



**P. BABU**
Managing Partner

**Cell : 9486456947**
**9486959329**

# JAMUNA SAAI

# CONSTRUCTIONS

**NLC REGD. CONTRACTOR**

**SPECIALIST IN**

**CIVIL WORK**
ROAD WORKS
BRIDGE WORKS

**MECHANICAL WORKS**
HEAVY STRUCTURAL
PIPING, FABRICATION

**ERECTION WORKS**
NPCL AUTOMATIC
ELECTRICAL
PAINTING WORKS ETC.

**No.232, B-II Block, NLC Rehabilation Centre, Indira Nagar,**
**Neyveli - 607 801, Kurinjipadi Tk., Cuddalore Dt.,**
**E-mail : jamunasaai@gmail.com / dkumaravel86@yahoo.com**

# எது தமிழ்த் தேசியம்...?

## திராவிடர் விவசாயத் தொழிலாளர் சங்கம் நூல் திறனாய்வுக் கருத்தரங்கம்




எது தமிழ்த் தேசியம், திராவிடர் விவசாயத் தொழிலாளர் சங்கம் நூல் திறனாய்வுக் கருத்தரங்கம் 1.3.2020 ஞாயிறு மாலை 5 மணிக்குச் சென்னை மயிலாப்பூர் டாக்டர் நடேசன் சாலையில் உள்ள திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ்வழிக் கல்வி இயக்கம் நடத்திய இக் கருத்தரங்கிற்குச் சின்னப்பா தமிழர் தலைமைச் தாங்கினார். கணேசன் வரவேற்புரையாற்றினார். உமாபதி தி.வி.க.தபசி குமரன் நற்றமிழன் த.கி.இ. அருண்பிரசாத் பெ.உ.முல்லை தமிழன், வி.சி.க.இளஞ் சித்திரன், த.மக்களவை ஆகியோர் முன்னிலை வகித்தனர். வாலாசா வல்லவன் மா.பெ.பொ.க. நூல் திறனாய்வு உரையாற்றினார். பெரியார் சரவணன் தனது ஏற்புரையை அடுத்து எது தமிழ்த்தேசியம் என்றத் தலைப்பிலும் உரையாற்றினார். சுடாலின் கவுதமன் நன்றியுரையாற்றினார்.



## தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் மீது பொய் வழக்கு மா.பெ.பொ.க. கண்டனம்

துக்ளக் ஆசிரியர் ஆடிட்டர் குருமூர்த்தி வீட்டருகில் வெடிகுண்டு வைக்கப்பட்டது என எவ்வித அடிப்படையுமின்றி தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் பத்துபேர் மீது பொய்க்குற்றம் சுமத்தி அவர்களைக் குண்டர் சட்டத்தின் கீழ் சிறைப்படுத்தியுள்ளனர். அவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டுமென மா.பெ.பொ.க. தமிழக அரசை கேட்டுக் கொள்கிறது.

## அறிவிப்பு

### உரிமை மற்றும் வெளியீடு பற்றிய விவரம் அறிக்கை படிவம் IV [விதி எண்.8இன்படி]

### சிந்தனையாளன் – மாத இதழ்

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடப்படும் இடம் | : மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050. |
| 2. | அச்சிடுவோர் | : ஸ்ரீ மூகாம்பிகை ஹை-டெக் பிரிண்ட்ஸ் எண்.24, ஆயில் மாங்கர் தெரு (வாணியர் தெரு) (ஜாம் பஜார் மார்கெட் எதிரில்) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. பேசி : 044-28484457 |
| 3. | வெளிவரும் காலம் | : மாதந்தோறும் |
| 4. | வெளியிடுவோர் பெயரும் முகவரியும் | : வே. ஆனைமுத்து மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050. |
| 5. | ஆசிரியார் பெயரும் முகவரியும் | : மேலே உள்ளபடி |
| 6. | இதழுக்கு உரிமையாளர் களின் பெயர்(களும்) முகவரி(களும்) | : மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050. |

இங்கு மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் எனக்குத் தெரிந்த வரையில் உண்மையானவை என்று இதன்மூலம் உறுதி கூறுகிறேன்.

சென்னை
28.02.2020

ஒப்பம்
**வே. ஆனைமுத்து**
வெளியீட்டாளர்

## பாலாஜியின் தாயார் எசோதம்மாள் மறைவு



தாம்பரம் சூரியன் ப்ரோமோட்டர்ஸ் இயக்குநர் தோழர். பாலாஜி தாயார் எசோதம்மாள் (வயது 88) திங்கள் மாலை 4 மணி யளவில் (02.03.2020) அன்று மறைந்தார். இறுதி ஊர்வலம் 03.03.2020 மாலை 4. மணியளவில் நடைபெற்றது.அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- சூரியன் ப்ரோமோட்டர்ஸ் & டெவலர்ப்பர்ஸ், தாம்பரம்

# நிலக்கடலை

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் (கு.1033, அதி.104)

உலக அளவில் நிலக்கடலை உற்பத்தியில் சீனா விற்கு அடுத்து இந்தியாவில்தான் அதிகம். நிலக்கடலை உற்பத்தி உழவுத் தொழிலில் சிறந்த உற்பத்தியாகும். தென் இந்தியாவில் அதிகம் உற்பத்தியாகின்றது. குறைந்த அளவு நீர் இருந்தாலே கடலை சாகுப்படிக்கு போதுமானது. நெற்பயிர்போல் நீர் அதிகம் தேவை யில்லை.

நிலக்கடலையில், நார்ச்சத்து, வைட்டமின்கள், மாங்கனீசு, பொட்டாசியம், துத்தநாகம், இரும்பு போன்ற தாதுச் சத்துக்களும் உள்ளன. பித்தப்பைக் கல்லைக் கரைக்கும். இதயம் வலுப்பெறும். நிலக்கடலையில் ஆன்டி ஆக்சிடென்ட் இருப்பதால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகம் உள்ளது. மூளை வளர்ச்சிக்குத் தேவையான வைட்டமின்கள் உள்ளதால் நினைவாற்றல் அதிகம் நிலைக்கும். மன அழுத்தத்தைக் குறைக்கும். அமினோ அமிலம் அதிகம் உள்ளது. மனிதர்களுக்கு நன்மை பயக்கும். நல்ல கொழுப்பு அதிகம் உள்ளது.

நிலக்கடலை, பாதாம் பிஸ்தாவைவிட சிறந்த சக்தி மிகுந்தது. கருப்பைக் கோளாறுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தாதுக்களும் சத்தும் நிறைந்துள்ளது. தொடர்ந்து நிலக்கடலை சாப்பிடும் பெண்களுக்குக் கருப்பைக் கட்டிகள், நீர்க்கட்டிகள் ஏற்படாது. கருவுற்றலுக்கு நன்கு துணை நிற்கும். மகப்பேறு நன்றாக இருக்கும். கருவின் மூளை மற்றும் நரம்பு வளர்ச்சிக்கு நன்றாகப் பயன் படும். கருத்தரிப்பதற்கு முன்பும், கருவுற்ற பின்பும் நிலக்கடலையைப் சாப்பிடலாம்.

நிலக்கடலைச் சாகுபடியாகும் காலங்களில் எலிகள், பறவைகள், ஆடு, மாடு, முயல்கள் போன்ற உயிரி னங்கள் இனப்பெருக்கம் அதிகரிக்கின்றன. எனவே இயற்கை முறையில் உற்பத்தியாகும் நிலக்கடலையை உண்டு, அதை உற்பத்தி செய்யும் உழவர்களுக்குத் துணை நிற்போம், தலைவணங்குவோம்.

- உழவர் மகன் **ப. வடிவேலு**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - மார்ச்சு-2020

| | | |
|---|---|---|
| **இரா.பச்சமலை** | சென்னை | 1250/- |
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **இரா.பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - மார்ச்சு-2020

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பெண்ணாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளியிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **ஸ்ரீ மூகாம்பிகை ஹை-டெக் பிரிண்ட்ஸ்,** எண்.24, ஆயில் மாங்கர் தெரு (வாணியர் தெரு)
(ஜாம் பஜார் மார்கெட் எதிரில்) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. பேசி : 044-28484457

Printed by **SREE MUGAMBIKAI HI-TECH PRINTS** No.24, Oil Monger Street (Vaniyar Street), Opp. Zam Bazaar Market, Triplicane, Chennai - 600 005. Ph : 044-28484457 and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**